# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி

## தமிழ்நாடு மாநிலக்குழு

# அரசியல் அறிக்கை







# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி

## தமிழ்நாடு மாநிலக்குழு

---

# அரசியல் அறிக்கை

## தோழர்களே, வணக்கம்.

தமிழ்நாட்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அங்கம் வகிக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் உள்ள மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி, 2021 சட்டமன்ற தேர்தலில் பெரும் வெற்றியைப் பெற்றுள்ளது. திராவிட முன்னேற்ற கழகம் தனித்து ஆட்சி அமைக்கத் தேவையான பெரும்பான்மை சட்டமன்ற உறுப்பினர்களை கொண்டிருப்பதால் தனியாக ஆட்சி அமைத்துள்ளது. இப்புதிய சூழலில் கட்சியின் தேசியக் குழு வழிகாட்டுதலுக்கு உட்பட்டு தமிழ்நாட்டில் அரசியல் மற்றும் அமைப்புநிலை செயல்பாடுகளை ஒழுங்கமைத்துக் கொள்ள வேண்டும்.

## பாஜக அரசின் ஏழாண்டு ஆட்சி

ஆண்டுக்கு இரண்டு கோடி வேலை வாய்ப்புகள், வெளிநாடுகளில் பதுக்கியுள்ள கருப்பு பணத்தை மீட்டு ஒவ்வொருவரின் வங்கி கணக்கிலும் பதினைந்து இலட்சம் செலுத்துதல், விவசாயிகள் வருமானத்தை இரட்டிப்பாக்குவது, "குறைந்த அரசு நிர்வாகத்தில் அதிகபட்ச ஆட்சி வழங்கும்" குறைவான அரசுத் தலையீடு, வெளிப்படைத்தன்மை, ஊழலற்ற நிர்வாகம் என பல வாக்குறுதிகளோடு 2014 மற்றும் 2019ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தல்களில் நரேந்திர மோடி தலைமையில் பாரதீய ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்தது. இந்த ஆட்சியின் ஏழாண்டு கால நடவடிக்கைகளை பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டியது இன்றைய அவசியமாகும்.

## நாட்டின் பொருளாதார நிலைமை

*2025ஆம் ஆண்டுக்குள் இந்தியாவை ஐந்து ட்ரில்லியன் டாலர்கள் கொண்ட பொருளாதாரமாக உருவாக்குவது என்பது மோடியின் வாக்குறுதிகளில் ஒன்று.*

*நாட்டின் பொருளாதார நிலைமை பற்றி அரசு தரும் விவரங்களே பொருளாதாரம் தீவிர சிகிச்சை பிரிவில், (ஐசியுவில்) உள்ளதை தெளிவுபடுத்துகின்றன. 2019 - 20 நிதி ஆண்டிலேயே பொருளாதார மந்தநிலை தெளிவாகத் தெரிந்தது. 2020 ஜனவரி இறுதியில் கொரோனா பெரும் தொற்று பரவலின் ஆரம்ப காலத்திலேயே மத்திய அரசின் கடந்த ஆறு ஆண்டு காலக் கொள்கைகளின் காரணமாக மக்களின் வாங்கும் சக்தி அதல பாதாளத்திற்கு தள்ளப்பட்டுவிட்டது. அதிலும் குறிப்பாக, 2016 நவம்பர் மாதத்தில் எடுக்கப்பட்ட பணமதிப்பிழப்பு நடவடிக்கை, அதனை தொடர்ந்த குழப்பம் நிறைந்த, கொடுமையான ஜிஎஸ்டி வரிவிதிப்பு, பல ஆண்டுகளாக மக்கள் மீது மறைமுக வரிகளை உயர்த்தியும், (எடுத்துக்காட்டாக, பெட்ரோல் டீசல் - எரிவாயு கலால் வரிகளை அடிக்கடி மோடி அரசு ஏற்றி வருவது), கார்ப்பரேட்களுக்கு பெரும் வரிச்சலுகைகள் அளித்தும் வரும் அரசின் வரிக்கொள்கைகள் - ஆகியவற்றால், இந்தியா மூன்று பெரும் பிரச்சினைகளை சந்திக்க நேர்ந்துள்ளது: 1. தொடரும் வேளாண் நெருக்கடி, 2. வரலாறு காணாத வேலையின்மை பிரச்சினை, 3. மக்களின் வாங்கும் சக்தியில் பெரும் சரிவு என, நெருக்கடியில் தள்ளப்பட்டிருந்த பொருளாதாரத்தின் மீது, கொரோனா பெரும் தொற்றுக் காலத்தில் ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் நாட்டின் பொருளாதார வீழ்ச்சியை மேலும்ஆழப்படுத்தியுள்ளன. இந்நிலையில் 2021-22 ஆம் ஆண்டுக்கான ஒன்றிய அரசின் பட்ஜெட் உழைக்கும் மக்களுக்கும், விவசாயிகளுக்கும், நாட்டின் சுயசார்புக்கும் எதிராகவே உள்ளது.*

## பாஜக அரசின் பட்ஜெட்

'வரலாறு காணாத' பட்ஜெட் என கார்ப்பரேட் ஊடகங்களும், ஆளும் கட்சி தலைவர்களும் பிரச்சாரம் செய்தனர். ஆனால், உண்மையில் அதிதீவிர தாராளமயமாக்கலும், தனியார்மயமாக்கலும் இந்தியாவின் உற்பத்திச் சொத்துகளின் பெரும்பகுதியை கொள்ளையடிக்க பன்னாட்டு, இந்நாட்டு பெருமுதலாளிகளுக்கு வாய்ப்பளிப்பதும்தான் இந்த பட்ஜெட்டின் சாராம்சம்.

உள்ளடக்கத்தில் இது ஒரு கார்ப்பரேட் நலன்காக்கும் பட்ஜெட் என்பது தெளிவாகிறது. இந்திய உழைப்பாளி மக்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளான வாழ்வாதாரம், பணிப்பாதுகாப்பு, வேலை வாய்ப்பு, விவசாய நெருக்கடிகளை மேலும் தீவிரப்படுத்தும் வகையில்தான் பட்ஜெட் அமைந்துள்ளது. கடுங்குளிரிலும், பெருமழையிலும் இந்தியாவின் வேளாண்மையையும், விவசாயிகளையும் பாதுகாக்கப் போராடிவரும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும், தொழிலாளர் விரோதமான அரசின் சட்டங்களை எதிர்த்துப் போராடிவரும் தொழிலாளர்களுக்கும், இந்த பட்ஜெட் அளிப்பது, கூடுதல் மறைமுக வரிகளும் கடும் வாழ்க்கை சுமைகளுமாகும். (மறைமுக வரி உயர்வின் மூலம் கூடுதலான செலவுச் சுமை மட்டும்தான்.)

## பொருளாதார மந்தம்

2019-20 இல் ஒன்றிய அரசின் மொத்த பட்ஜெட் செலவு ரூ. 26.86 இலட்சம் கோடி என பட்ஜெட் ஆவணங்கள் கூறுகின்றன. 2020-21க்கான மொத்த செலவின் பட்ஜெட் மதிப்பீடு ரூ. 30.42 லட்சம் கோடி. பெருந்தொற்று, மற்றும் ஊரடங்கு விளைவாக அரசின் செலவு தவிர்க்க முடியாத வகையில் சற்று உயர்ந்துள்ளது. 2020-21க்கான மொத்த செலவின் திருத்திய மதிப்பீடு ரூ. 34.5 லட்சம் கோடி என பட்ஜெட் ஆவணம் கூறுகிறது. இது மிகை மதிப்பீடு. மேலும், பட்ஜெட் மதிப்பீட்டின்படி வரும் 2021-22க்கான மொத்த செலவு ஒதுக்கீடு ரூ 34,83,000 கோடிதான். அதாவது, வரும் ஆண்டில் அரசின் செலவு அதிகரிக்காது! பண அளவில் சொற்பம் அதிகரித்தாலும்,

பணவீக்கத்தை கணக்கில் கொள்கையில் அரசின் மொத்த செலவு குறையும். இந்திய பொருளாதாரம் கடும் மந்த நிலையில் உள்ளது. பங்குச்சந்தை புள்ளி மட்டும்தான் ஆகாயத்தில் உள்ளது. பெரும் வரிச்சலுகை பெற்றுள்ள செல்வந்தர்களும், பெரும் கம்பெனிகளும் உற்பத்திசார் முதலீடுகளை மேற்கொள்ளவோ, வேலை வாய்ப்புகளை பெருக்கவோ தயாராக இல்லை. கடும் துயரில் உள்ள பெரும்பான்மை மக்களுக்கு அரசு நிதி நிவாரணம் அளிக்கவில்லை. அரசும் முதலீடுகளை மேற்கொள்ள மறுக்கிறது. எனவே, வாங்கும் சக்தி படுபாதாளத்தில் உள்ளதை மேம்படுத்தி, பொருளாதார மந்தநிலையைப் போக்க இந்த பட்ஜெட் முற்றிலுமாக உதவாது என்பது உறுதியாகிறது.

## கல்வி, சுகாதாரம், ஊரக வளர்ச்சி, வேளாண் துறைக்கான ஒதுக்கீடு

பெருமளவிற்கு சுகாதாரத் துறைக்கான ஒதுக்கீட்டை கூட்டியுள்ளதாகவும், மூலதனச் செலவுகளை பெரிதும் உயர்த்தியுள்ளதாகவும் அமைச்சர் கூறுவது உண்மையல்ல. நடப்பு ஆண்டிற்கான மத்திய அரசின் சுகாதாரத்துறையின் செலவு திருத்திய மதிப்பீட்டின்படி ரூ.82,445 கோடி. வரும் ஆண்டிற்கான ஒதுக்கீடு ரூ.74,602 கோடிதான். அதாவது, சென்ற ஆண்டைவிட கிட்டத்தட்ட 10 சதவிகிதம் குறைவு. வேறு பல துறைகளின் நிலைமையும் இவ்வாறே. வேளாண் துறைக்கான 2020-21 பட்ஜெட் ஒதுக்கீடு ரூ.1,54,775 கோடி. இந்த ஒதுக்கீட்டில் துண்டு விழுந்து, திருத்தப்பட்ட மதிப்பீடு ரூ.1,45,355 கோடியாக குறைந்துள்ளது. அதுமட்டுமல்ல. 2021-22க்கான ஒதுக்கீடு ரூ.1,48,301 கோடி தான். விலைவாசி உயர்வை கணக்கில் கொண்டால் இது நடப்பு ஆண்டுக்கான திருத்தப்பட்ட மதிப்பீட்டை விட குறைவு. கல்விக்கான செலவு 2019-20ல் ரூ. 89,437 கோடி. 2020-21 பட்ஜெட்டில் கல்விக்கான ஒதுக்கீடு ரூ.99,312 கோடி என்று மதிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், திருத்தப்பட்ட மதிப்பீட்டின்படி, இது ரூ.85,089 கோடி தான். அதாவது, உண்மையளவில் கடும் சரிவு.

2021-22க்கான பட்ஜெட் ஒதுக்கீடு கல்விக்கு ரூ. 93,224 கோடி என்று பட்ஜெட் கூறுகிறது. இது நடப்பாண்டின் பட்ஜெட் ஒதுக்கீட்டை விட குறைவு என்பது மட்டுமல்ல; இதுவும் நிறைவேறாது என்பதுதான் கடந்தகால அனுபவம். ஊரக வளர்ச்சிக்கு அதிக ஒதுக்கீடு என்று பட்ஜெட்டில் படம் காட்டப்பட்டுள்ளது. ஆனால், உண்மை வேறு. இது

2019-20 இல் ரூ.1,42,384 கோடி. 2020-21 பட்ஜெட் ஒதுக்கீடு ரூ. 1,44,817 கோடிதான். பெரும் தொற்று - ஊரடங்கு சூழலில் ஊரக வேலை உறுதித் திட்டத்திற்கான ஒதுக்கீடு கணிசமாக உயர்ந்ததால் திருத்தப்பட்ட மதிப்பீடு ரூ. 2,16,342 கோடியாக காட்டப்பட்டுள்ளது. ஆனால், வரும் 2021-22க்கான பட்ஜெட் ஒதுக்கீடு ரூ. 1,94,633 கோடியாக குறைக்கப்பட்டுள்ளது. மந்த நிலை, பெருந்தொற்று, ஊரடங்கு சூழலில் கிராமப்புறங்களும், விவசாயமும் எதிர்கொண்டுவரும் பிரச்சினைகளின் அளவை கணக்கில் கொண்டால், இது யானைப்பசிக்கு சோளப்பொரி என்பது விளங்கும். கல்வி, சுகாதாரம், விவசாயம், ஊரக வளர்ச்சி உள்ளிட்ட அனைத்து முக்கிய துறைகளுக்குமான ஒதுக்கீடுகள் எல்லாமே இவ்வாறுதான் அமைந்துள்ளன.

## நிதிப்பற்றாக்குறை

நடப்பு ஆண்டில் கார்ப்பரேட் கம்பெனிகள் செலுத்தும் வருமான வரி ரூ.6,81,000 கோடி என்பது பட்ஜெட் மதிப்பீடு. ஆனால், ரூ. 4,46,000 கோடி தான் என்பது திருத்தப்பட்ட மதிப்பீடு. தனிநபர் வருமான வரி வசூல் பட்ஜெட் மதிப்பீட்டின்படி ரூ.6,38,000 கோடி. ஆனால், திருத்தப்பட்ட மதிப்பீடு ரூ. 4,59,000 கோடிதான். இவ்வாறு செல்வந்தர்களும், கம்பெனிகளும் முறையாக வரி செலுத்துவார்கள் என்று நம்பி எதிர்பார்த்த தொகையில் நான்கு லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமாக பள்ளம் விழுந்துள்ளது. ஆனால், ஒன்றிய அரசின் கலால் வரி மூலம் அரசு ரூ.2,67,000 கோடி பெறும் என்ற பட்ஜெட் மதிப்பீட்டை விட மிகவும் கூடுதலாக திருத்தப்பட்ட மதிப்பீடு ரூ.3,61,000 கோடி என வசூலிக்கப்பட்டுள்ளது. அதாவது, பன்னாட்டுச் சந்தைகளில் பெட்ரோலியம், கச்சா எண்ணெய் விலை

சரிந்தபோதும் கலால் வரியைக் கூட்டி, கிட்டத்தட்ட ஒரு லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு மக்கள் மீது அரசு பளுவைச் சுமத்தியுள்ளது. பெரும் தொற்றுக்காலத்தில் அரசின் மோசமான சிக்கன நடவடிக்கைகளாலும் தொற்றின் பாதிப்பாலும் ஜிஎஸ்டி வரிவசூலும் கணிசமாக குறைந்துள்ளது. அரசின் நிதிப் பற்றாக்குறை பெரிதும் அதிகரித்துள்ளதற்கு இதுதான் காரணம். அரசு, மக்கள் நலனுக்காகவும் நாட்டு வளர்ச்சிக்காகவும் கூடுதலாக செலவு செய்துள்ளதால்தான் பற்றாக்குறை அதிகரித்துள்ளது என்ற வாதம் முற்றிலும் தவறானது. மோடி அரசு தாராளமய அணுகுமுறையிலும் சமூக நலத் திட்டங்களை வெட்டிக் குறைக்கும் நடவடிக்கைகளிலும் மிகவும் தீவிரமாக உள்ளது என்பதே உண்மை.

## உணவு உரம் எரிபொருள் மானியங்கள்

மோடி அரசின் ஏழு ஆண்டுகளுக்கும் மேலான ஆட்சியில் உணவு, உரம் மற்றும் எரிபொருள் ஆகிய மூன்று முக்கிய மானியங்கள் தொடர்ந்து குறைக்கப்பட்டு வருகின்றன. நடப்பு ஆண்டின் பிரத்தியேக சூழலால், உரம், மற்றும் உணவு மானியம் அதிகரித்துள்ளது. ஆனால், பெட்ரோலியம் மானியத்தில் ரூ.38,529 கோடி என்ற 2019-20 தொகைக்கும் ரூ.38,790 கோடி என்ற 2020-21 திருத்தப்பட்ட மதிப்பீட்டிற்கும் மிகக் குறைவான வித்தியாசமே உள்ளது. மேலும், அதிர்ச்சி ஊட்டுவது 2021-22க்கான பெட்ரோலியம் மானியம். இதில், மூன்றில் ஒரு பங்கு அளவில் ரூ.12,995 கோடியாக குறைக்கப்பட்டுள்ளதாகும். சராசரி ஆண்டுகளில் இந்த உணவு, உரம் மற்றும் எரிபொருள் ஆகிய மூன்று முக்கிய மானியங்களின் மொத்தத்தொகை, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 2 சதவிகிதத்திற்கும் குறைவாகவே இருக்கும். ஆனால், மறுபுறம், செல்வந்தர்களுக்கும், கார்ப்பரேட் கம்பெனிகளுக்கும் வரிச்சலுகைகளை அள்ளி வீசிவிட்டு, அவர்களிடமிருந்தே அரசின் கடன் பத்திரங்கள் மூலம் தன் செலவுகளுக்கு அரசு வாங்கும் கடனுக்கு ஆண்டுதோறும் கட்டுகின்ற வட்டி, தேச உற்பத்தி மதிப்பில் கிட்டத்தட்ட

நான்கு சதவீதமாகும். வேறுவகையில் சொல்வதானால், நாட்டின் செல்வங்களை உற்பத்தி செய்து தரும் உழைப்பாளி மக்கள் மீது கடுமையான மறைமுக வரிகளைப் போட்டு, அவ்வாறு கிடைக்கின்ற வருவாயில் கணிசமான பகுதியை விரல்விட்டு எண்ணக்கூடிய பணமுதலைகள் கையில் கொடுப்பதுதான் அரசின் வரவு செலவு கொள்கையின் மையமான அம்சம். நடப்பு ஆண்டில் மட்டும் அரசின் வட்டி செலவு கிட்டத்தட்ட 7 லட்சம் கோடி ரூபாயை எட்டியுள்ளது. 2019-20 ஆண்டில் மூன்று மானியங்களால் அரசுக்கு செலவு ரூ.2,30,000 கோடிக்கும் குறைவு. அதே ஆண்டில் அரசு (பெரும்பாலும் செல்வந்தர்களுக்கு) செலுத்திய வட்டி தொகை ரூ 6,12,000 கோடியாகும்.

## மாநில அரசுகளின் நிதி உரிமை பறிப்பு

கார்ப்பரேட்டுகளுக்கும் செல்வந்தர்களுக்கும் ஒன்றிய அரசு வாரி வழங்கும் வரி சலுகைகள் மாநில அரசுகளின் வரி வருமானங்களைப் பெரிதும் பாதிக்கிறது. வரிப் பகிர்வில் கிடைக்கும் தொகை சரிந்து கொண்டே போகிறது. பதினைந்தாம் நிதி ஆணையத்தின் பரிந்துரைகளும் மாநில அரசுகளின் அதிகாரங்களையும், நிதி ஆதாரங்களையும் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளன. நேர்முக வரி வருமானத்தில் ஏற்பட்டுள்ள சரிவின் கணிசமான பகுதியை மாநில அரசுகள் சுமக்க வேண்டியுள்ளது. இது போதாதென்று செஸ் மற்றும் சர்சார்ஜ் மூலம் திரட்டும் நிதிகளை மத்திய அரசு மாநிலங்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டியதில்லை. இந்த யுக்தியை ஒன்றிய அரசு மேலும், மேலும் இந்த பட்ஜெட்டிலும் பயன்படுத்திவருகிறது. ஜிஎஸ்டி மூலம் மாநிலங்களின் வரிவிதிக்கும் அதிகாரங்களைப் பறித்துக் கொண்டுள்ள ஒன்றிய அரசு, ஜிஎஸ்டி நட்ட ஈட்டுத் தொகையைக்கூட மாநிலங்களுக்கு தர மறுக்கிறது. இதன் மூலமும் வேறு வகைகளிலும் நடப்பு நிதி ஆண்டில், பெரும் தொற்றுக் காலத்தில் மாநில அரசுகளை அதிக வட்டியில் கடன் வாங்க வேண்டிய நிர்பந்த நிலைக்கு தள்ளியுள்ளது.

## பொதுத்துறை நிறுவனங்கள் தனியார்மயமாக்கம்

1991இல் இருந்து தாராளமய கொள்கைகள் அமலுக்கு வரத் துவங்கின. ஆனால், தாராளமய கொள்கைகளை தீவிரமாக பின்பற்றிய காங்கிரஸ் ஆட்சியாளர்கள் கூட பொதுத்துறை நாட்டுக்கு தேவையில்லை என்ற நிலைபாட்டை எடுக்கவில்லை. தனது நிறுவனங்களின் பங்குகளை அரசு தனியாருக்கு விற்பது என்பதை நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரஸ் அரசு துவக்கி வைத்தது என்றாலும், பன்மடங்கு அதிகப்படுத்தியது பாஜக தலைமையிலான ஆட்சிகள் தான்.

மோடி தலைமையிலான பாஜக அரசு 2014-19 ஆகிய ஐந்து ஆண்டு காலத்தில் ரூ.2,96,713 கோடி அளவிற்கு பொதுத்துறை பங்குகளை விற்றது. அதாவது, சராசரியாக, ஆண்டு ஒன்றுக்கு கிட்டத்தட்ட ரூ. 60,000 கோடி அளவிற்கு பொதுத்துறை பங்குகள் விற்கப்பட்டன. 2019-20க்கு அரசின் பொதுத்துறை பங்கு விற்பனை இலக்கு ரூ. ஒரு லட்சத்து ஐந்தாயிரம் கோடி, 2020-21க்கு ரூ.2,10,000 கோடி என அறிவிக்கப்பட்டது. கடந்த இரண்டு ஆண்டுகளில் இலக்குகள் எட்டப்படாவிட்டாலும் தனியார்மய கொள்கை நிலைபாடும் அதன் வேகமான அமலாக்கமும் நிகழ்ந்து வருகின்றன. வரும் ஆண்டில் ரூ.1,75,000 கோடி என்ற அளவிற்கு பொதுத்துறை பங்குகளின் விற்பனை இலக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. நடைமுறை செயல்பாடாக மட்டுமின்றி பொதுத்துறை 'அழிப்பு' அரசின் கொள்கையாகவும் அறிவிக்கப்பட்டு வேகமாக அமலாகிவருகிறது. பட்ஜெட்டின் அடிநாதமாக அமைந்துள்ளது மோடி அரசின் தனியார்மயமாக்கல் வெறி. நாட்டை விற்பதற்கு "சுய சார்பு" என்று பெயர் சூட்டியிருப்பது கொடுமையிலும் கொடுமை. ஒன்றிய அரசால் 5 கோடி ரூபாய் முதலீட்டில் ஆரம்பிக்கப்பட்ட எல்ஐசி நிறுவனம் அறுபத்தி ஐந்து ஆண்டுகளில் முப்பத்தி ஆறு லட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள நிறுவனமாக வளர்ந்துள்ளது. இந்நிறுவனத்தின் 20 லட்சம் கோடி ரூபாய் இதுவரை ஒன்றிய அரசுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட மிகப்பெரிய அரசின் காப்பீட்டு நிறுவனத்தை திரு மோடி தலைமையிலான பாரதிய ஜனதா ஒன்றிய அரசு 100 சதவீதம் தனியாருக்கு தாரை வார்க்க முடிவு செய்துவிட்டது.

## உழைக்கும் மக்களுக்கு எதிரான பட்ஜெட்

ஒன்றிய அரசின் இந்த பட்ஜெட் மக்களுக்கு எதிரான போர்ப்பிரகடனம். கடந்த ஒரு ஆண்டாக உழைப்பாளர் சட்டங்களில் தொழிலாளர்களுக்கு விரோதமான மாற்றங்கள், விவசாயிகளுக்கு எதிரான வேளாண் துறை சம்பந்தப்பட்ட மூன்று புதிய சட்டங்கள், மின்சார சட்ட திருத்தம், கடல் மீன்பிடி உரிமையைப் பறிக்கும் சட்டம் என்று தாக்குதலின் தொடர்ச்சியாகவே இந்த பட்ஜெட் அமைந்துள்ளது. மேலும், முதன்முறையாக, எந்த கூச்ச நாச்சமும் இல்லாமல் பொதுத்துறை மூடப்படவேண்டும் என்று பட்ஜெட் உரையில் அறிவிப்பதும், இந்நிறுவனங்களில் அந்நிய மூலதனம் ஆதிக்கப்பங்கு வகிக்கலாம் என்று பச்சைக்கொடி காட்டுவதும், நாட்டின் கேந்திரமான நிதித்துறையையும், கனிம வளங்களையும் பாதுகாப்புத் துறையையும் கூட அந்நியக் கம்பெனிகளிடம் ஒப்படைக்கலாம் என்ற நிலைபாட்டை எடுப்பதும், இந்த பட்ஜெட் யாருக்கானது என்பதை தெளிவாகத் தெரிவிக்கின்றன. விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த நடவடிக்கை ஏதும் பட்ஜெட்டில் இல்லை என்பது மட்டுமல்ல; மறைமுக வரிகளை மேலும் உயர்த்தியும், அத்தியாவசிய பண்டங்கள் சட்டத்தை நீர்த்துப் போகும் வண்ணம் திருத்தியும் மோடி அரசு பணவீக்கத்தை பகிரங்கமாக ஊக்குவிக்கிறது.

வேலை வாய்ப்புகளை பெருக்கவோ, கிராமப்புற - நகர்ப்புற உழைப்பாளி மக்களின் வாங்கும் சக்தியை அதிகரிக்கவோ, நாட்டு வளர்ச்சிக்கு மிகவும் அவசியமான வேலைவாய்ப்பைப் பெருக்கும் முதலீடுகளை மேற்கொள்ளவோ பட்ஜெட்டில் எந்த நடவடிக்கையும் இல்லை. சட்டப்பேரவை தேர்தல்கள் நடக்கவுள்ள மாநிலங்களில் நெடுஞ்சாலை திட்டங்களை அறிவித்துள்ளது. இது நடப்பாண்டில் பொருளாதார நிலைமையை உயர்த்த உதவாது. பன்னாட்டு பொருளாதாரத்தில் நிகழ்ந்து வரும் மாற்றங்களும், உலக முதலாளித்துவ அமைப்பின் ஆழமடைந்துவரும் நெருக்கடியும், பெருந்தொற்று தொடரும் சூழலும் இந்திய பொருளாதாரத்தை மேலும், சிக்கல்களுக்கு உள்ளாக்கும். அவற்றை எதிர்கொள்ள இந்த ஆண்டின் ஒன்றிய பட்ஜெட்

எந்த வகையிலும் பயன்படாது. நாட்டையும், உழைப்பாளி மக்களையும் இந்திய, அந்நிய ஏகபோக முதலாளிகளின் கொத்தடிமைகளாக ஆக்கும் அரசின் கொள்கைகளைத்தான் பட்ஜெட் பிரதிபலிக்கிறது.

## நாட்டின் சொத்துக்களை பணமாக்கும் திட்டம்

தேசிய நெடுஞ்சாலைகள், ரயில்வே, மின் பகிர்மானம், மின் உற்பத்தி, எண்ணெய்-இயற்கை எரிவாயு குழாய்பாதை உற்பத்தி, தொலைத்தொடர்பு, சேமிப்பு கிடங்குகள், சுரங்கங்கள், விமான நிலையங்கள், துறைமுகங்கள், விளையாட்டுஅரங்குகள் உள்ளிட்டவற்றை கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு தாரை வார்க்கும் திட்டத்தை இந்திய நிதி அமைச்சர் அண்மையில் அறிவித்துள்ளார். 75 ஆண்டுகாலமாக சேமிக்கப்பட்டு வந்த மக்களின் சொத்தை சூறையாடுவதாக உள்ளது. இது ஒரு தேச விரோத குற்ற நடவடிக்கையாகும்.

## வேலையின்மை அதிகரிப்பு

2016ஆம் ஆண்டிலிருந்து இந்திய பொருளாதாரம் தொடர்ந்து பல அதிர்ச்சிகளை அடுத்தடுத்து சந்தித்தது, பணமதிப்பிழப்பு, ஜிஎஸ்டி அமல்படுத்தியது, அவ்வப்போது அறிவிக்கப்பட்ட ஊரடங்குகள் என எல்லாம் சேர்ந்து இந்தியாவில் வேலையில்லா திண்டாட்டத்தை அதிகரித்து விட்டன.

கடந்த 45 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு 2017-18 காலகட்டத்தில் இந்தியாவில் வேலையின்மை 6.1 சதவீதமாக அதிகரித்தது என அரசின் அதிகாரபூர்வ அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஊரடங்கிற்குப் பிறகு 8.35 சதவிகிதம் வேலையின்மை அதிகரித்துள்ளது. அந்த எண்ணிக்கை இரு மடங்காக அதிகரித்திருப்பதாக சமீபத்தில் சி.எம்.ஐ.இ என்கிற அமைப்பு நடத்திய கணக்கெடுப்பில் தெரிய வந்திருக்கிறது.

2021ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து 2.5 கோடிக்கும் அதிகமானோர் தங்கள் வேலையை இழந்திருக்கிறார்கள்.

ஆண்டுக்கு இரண்டு கோடி வேலைவாய்ப்புகள் தேவை, ஆனால், கடந்த பத்து ஆண்டுகளில் இந்தியா, ஆண்டுக்கு 43 லட்சம் வேலை வாய்ப்புகளை மட்டுமே உருவாக்கியது.

மோடி அரசின் கார்பரேட் ஆதரவு கொள்கைகளினால் ஏற்கனவே தள்ளாடிக் கொண்டிருந்த குறு, சிறு, நடுத்தர தொழில்கள், கொரானாகால ஊரடங்கால் மேலும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்நிலைமையும் வேலையின்மை அதிகரிப்பதற்குக் காரணமாகும். ஆனால், மோடி அரசு இத்துறையை கண்டுகொள்ளாமல் உள்ளது. ஒன்றிய அரசின் புள்ளி விபரப்படி 27 கோடி பேர் வறுமை கோட்டில் உள்ளனர் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. 7.5 கோடிக்கு மேற்பட்டோர் மீண்டும் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

## கொரோனாவும் மோடி அரசும்

கொரோனா பெருந்தொற்று மக்களின் வாழ்க்கை நிலைகளை புரட்டிப் போட்டுக் கொண்டிருக்கிறது. அதனைக் கட்டுப்படுத்த வக்கற்ற ஒன்றிய அரசு, தொற்று காலத்தில் வாழ்வாதாரத்தையும் வேலைகளையும் இழந்து பரிதவிக்கும் புலம்பெயர் தொழிலாளிகள், சிறுகுறு விவசாயிகள், சிறுகுறு தொழில்முனைவோர், சிறுகுறு வணிகர்கள், இதர அனைத்துவகை தொழிலாளிகள் ஆகிய அனைத்து உழைப்பாளி மக்களுக்கும் உரிய நிவாரணம் தரவில்லை. ஒரு குடும்பத்திற்கு ஆறுமாத காலத்திற்கு மாதம் 7500 ரூபாய் ரொக்கப் பண உதவியும், நபர் ஒருவருக்கு 10 கிலோ தானியமும் அளிக்கக் கோரி இலட்சக்கணக்கான மக்கள் போராடி வருகின்றனர். மக்கள் கையில் பணமும் தானியங்களும் சென்று சேர்ந்தால், வாங்கும் சக்தி உயரும்; அது பொருளாதார மீட்சிக்கு வழிவகுக்கும் என்று அனைத்து பொருளாதார அறிஞர்களும் பல முறை எடுத்துச்சொல்லியும் மக்களுக்கு அத்தகைய நிவாரணத்தை அளிக்க ஒன்றிய அரசு மறுக்கிறது. பெயரளவிற்கு தானியம் வழங்கி மக்களை ஏமாற்றிவிட்டது. அனைவருக்கும் இலவச கொரோனா தடுப்பூசி என்பதையே மாநிலங்கள் போராடி, உச்சநீதிமன்ற அறிவுறுத்தலின் பேரில் பெற வேண்டிய நிலைமையில்

உள்ளது. பன்னாட்டு மருந்து நிறுவனங்கள் கொரோனா பெருந்தொற்றுத் தடுப்பிற்கான தடுப்பூசி மற்றும் மருந்துகளை அதிக விலைக்கு விற்று கொள்ளையடிக்கின்றன. இதற்கு மோடி அரசு துணை போகிறது.

மக்களுக்கு நிவாரணம் அளிக்க மறுக்கும் ஒன்றிய அரசு இந்நாட்டு, பன்னாட்டு பெரும் கம்பனிகளுக்கு, முதலாளிகளுக்கு பல இலட்சம் கோடி ரூபாய் வருமான வரி சலுகைகளை வழங்கியுள்ளது.

## வேளாண் சட்டங்களும் போராட்டமும்

இந்தியாவின் ஜிடிபிக்கு, குறைவான பங்களிப்பை வழங்கும் விவசாயத் துறை தான், இந்தியாவில் வேலை பார்க்கத் தகுதியானவர்களில் பாதிக்கும் மேற்பட்டோருக்கு வேலை கொடுத்து வருகிறது.

இந்தியாவின் விவசாயத் துறையில் மாற்றங்கள் தேவை என்பதை அனைவரும் ஆமோதிப்பார்கள். ஆனால், அம்மாற்றங்கள் விவசாயிகளுக்கு ஆதரவாக இருக்க வேண்டும்.இந்நிலையில் கடந்த ஆண்டு மோடி அரசு கொண்டுவந்த

1. விலை உறுதி மற்றும் பண்ணை சேவைகள் சட்டம் 2020.
2. வேளாண்மை உற்பத்தி, மற்றும் வர்த்தக மேம்பாட்டுச் சட்டம் 2020.
3. அத்தியாவசியப்பொருள்கள் திருத்தச்சட்டம் 2020 ஆகிய இம்மூன்று வேளாண் சட்டங்களும் அந்நிய மற்றும் உள்நாட்டு கார்பரேட் நிறுவனங்களுக்கு ஆதரவாக உள்ளன. இதை எதிர்த்து இந்த நாட்டின் மிகப்பெரிய படை- தலைநகர் தில்லியின் நுழைவாயில்களில் அணிவகுத்துள்ள இலட்சக்கணக்கான விவசாயிகள் படை - பல மாதங்களாக மத்திய ஆட்சியாளர்களுக்கு ஒரு முக்கிய அரசியல் பாடம் கற்பித்துவருகின்றனர். அரசின் அடக்குமுறைகளை ஒன்றுபட்ட மக்கள் போராட்டம் வலுவாக எதிர்கொள்ளும் என்பதுதான் அந்தப் பாடம்.

விவசாயிகள் நடத்திவரும் போராட்டங்கள் சுதந்திர இந்தியாவின் வரலாற்றுச் சிறப்புமிக்க போராட்டமாகும். ஆனால், மோடி அரசு இச்சட்டங்களை அமல்படுத்தபிடிவாதம் காட்டி வருகிறது.

ஆனால், நாட்டின் பெரும் துயர் என்னவென்றால் மத்திய அரசு விவசாயிகளின் வாழ்வை மட்டுமல்ல; நாட்டின் அனைத்து உழைப்பாளி மக்களின் வாழ்வையும் நாசப்படுத்தி வருகிறது.

## தொழிலாளர் உரிமைகள் பறிப்பு

பன்னாட்டுப் பெரும் கம்பெனிகளுக்கு, பெருமுதலாளி களுக்கு இந்திய நாட்டின் உழைப்பாளி மக்களை - விவசாயிகளையும் தொழிலாளிகளையும் - மொத்தமாக ஒப்படைக்கும் வகையில், பாராளுமன்ற ஜனநாயகத்தை காலில் போட்டு மிதித்து மூன்று விவசாயிகள் விரோத சட்டங்களையும் கொண்டு வந்தது போல் தொழிலாளர் உரிமைகளைப்பறித்து, அவர்களை தினசரி கூலி அடிமைகளாக ஆக்கும் சட்டங்களையும் கொண்டுவந்துள்ளது. சுதந்திரத்திற்கு முன்பிருந்து இதுவரை தொழிலாளர்கள் போராடி பெற்ற 44 தொழிலாளர் சட்டங்களையும் வெறும் நான்கு சட்டத் தொகுப்பாக சுருக்கி விட்டனர். அரசின் இத்தகைய மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக மாபெரும் கிளர்ச்சி போராட்டங்கள் நாடுமுழுவதும் நடைபெற்று வருகின்றன. முன்பு எப்பொழுதும் இல்லாத அளவிற்கு விவசாயிகளும், கிராம, நகர தொழிலாளிகளும் அவர்களது அமைப்புகளும் ஒன்றிணைந்து களம் இறங்கியுள்ளனர். அதன் ஒரு மகத்தான பகுதிதான் தில்லியில் நடைபெற்றுவரும் வரலாற்றுச்சிறப்பு மிக்க விவசாயிகள் போராட்டம். இதில் தொழிலாளர் அமைப்புகளும் வலுவாக களம் இறங்கியுள்ளன.

## மோடி அரசின் இந்துத்துவா செயல்பாடுகள்

இந்திய நிர்வாகத்தில் தன்னாட்சி அமைப்புகளாக இருந்துவந்த நீதித்துறை, தேர்தல் ஆணையம், மத்திய புலனாய்வு துறை, வரலாற்று ஆய்வுக்குழு, உள்ளிட்டவைகளை வகுப்புவாத அபாயம் நிறைந்த இந்துத்துவா அமைப்புகளின் கைப்பாவைகளாக இயக்கும் பணியை பாஜக ஆட்சியாளர்கள்

செய்து வருகின்றனர். மாநிலங்களின் ஒன்றியம்தான் இந்தியா என்பதை மறந்து, சர்வ அதிகாரம் கொண்ட அரசாக ஒன்றிய பாஜக ஆட்சி தன்னை முன்னிறுத்துவதை காணமுடிகிறது. இந்திய அரசியல் சாசனம் வழங்கியுள்ள மாநிலங்களுக்கான உரிமைகளை அபகரிக்கும் அனைத்து பணிகளிலும் ஆர்எஸ்எஸ் கொள்கை அமலாக்கம் என்ற முறையில் பாஜக தீவிரமாக இயங்கி வருகிறது. அரசு இயந்திரத்தின் சகல மட்டங்களிலும் திட்டமிட்டே ஆர்எஸ்எஸ் ஊடுருவல் நடைபெற்றுக் கொண்டுள்ளது.

பாஜக, ஆர்.எஸ்.எஸ் முன்வைக்கும் இந்துத்துவா அகண்ட பாரதம் என்ற நோக்கத்தில் செயல்படும் அதே வேளையில், நவதாராளமய கொள்கையை தீவிரமாக அமலாக்கி வருகிறது. இரண்டின் நோக்கமும் பன்முகத் தன்மையை சிதைத்து, ஒரே பண்பாட்டை நிலை நிறுத்துவதாகும். பாஜக - ஆர்எஸ்எஸ் பழைமைவாத நோக்கம் கொண்டதுதான் என்றபோதிலும் நவதாராளமயம் என்ற ஏகாதிபத்திய உலகமயமாக்கலும், ஆர்.எஸ்.எஸ் என்ற அடிப்படை வாதமும் ஒன்றுக்கு ஒன்று துணை புரிவதாக இந்திய மண்ணில் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு உள்ளிட்ட அனைத்து மாநிலங்களிலும், சாதி அல்லது குறிப்பிட்ட அடையாள ரீதியிலான பிளவுகளுக்கும், ஒடுக்குமுறைகளுக்கும் இந்துத்துவா அடிப்படை வாதம் உதவுகிறது. இந்த புரிந்துணர்வு அடிப்படையிலேயே தாராளமயமும், ஆர்.எஸ். எஸ் அடிப்படைவாதமும் துணைசெய்கிறது. பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன் என்பதைப் போல், பாஜக தாராளமய கொள்கைக்கு தோழனாகவும் சாதிய, மத, பழைமைவாதத்திற்கு காவலனாகவும் செயல்படுகின்றது. எனவேதான் சாதி மறுப்பு, மத மறுப்பு திருமணங்களை ஏற்க மறுக்கிறது. பசு பாதுகாப்பு என்ற பெயரில் உழைக்கும் மக்களின் உணவு பழக்கத்தை மத நம்பிக்கையோடு இணைத்து தாக்குதல் நடத்துகின்றது. அண்ணல் அம்பேத்கர், வரைவுக்குழு தலைவராக இருந்து வழிநடத்தி நிறைவேற்றப்பட்ட அரசியல் சட்டத்தின் முகப்புரை இலட்சியங்களான மதச்சார்பின்மை, ஜனநாயகம், சோசலிஸம் ஆகியவற்றை மோடி அரசு வேம்பென வெறுக்கிறது.

## பாராளுமன்ற ஜனநாயகம் சிதைகிறது

பாராளுமன்றத்தின் ஜனநாயக செயல்பாடுகளை பாரதிய ஜனதா கட்சி முடக்கி வருகிறது. தனது பெரும்பான்மை பலத்தைப் பயன்படுத்தி இதைச் செய்கிறது எதிர்க்கட்சிகளின் குரலை ஒடுக்குவதின்மூலம் தனது எதேச்சதிகார குணாம்சத்தை வெளிப்படுத்துகிறது. மேலும், கடந்த குளிர்கால கூட்டத்தொடரில் எதிர்க்கட்சிகள் 3 வேளாண் சட்டங்கள் மற்றும் பெகாஸஸ் உளவு பிரச்சினைகளை பாராளுமன்றத்தில் எழுப்ப முயற்சி செய்தபோது, அதை அனுமதிக்காத பாரதிய ஜனதா ஆட்சி, அவசர அவசரமாக எவ்வித விவாதமும் இல்லாமல் 22 சட்டங்களை நிறைவேற்றியிருக்கிறது. இந்திய நாட்டின் பிரதமர் திரு மோடி அவர்கள் பாராளுமன்றத்தில் முழுமையாக இருந்து விவாதங்களில் பங்கேற்பதில்லை.

## தனிநபர் சுதந்திரம் பறிப்பு

இஸ்ரேல் நாட்டின் என்எஸ்ஓ என்ற நிறுவனம் தயாரித்துள்ள பெகாசஸ் என்ற உளவு மென்பொருள் இன்று உலகம் முழுவதும் மிகப்பெரிய அச்சுறுத்தலை உருவாக்கியுள்ளது. உலகம் முழுவதும் உள்ள முன்னணி செய்தி நிறுவனங்கள் இணைந்து இந்த பிரச்சினையை அம்பலப்படுத்தியுள்ளன. பெகாசஸ் உளவு மென்பொருளை பயன்படுத்தி இந்தியாவினுடைய அரசியல் தலைவர்கள், ஆளும் கட்சி அமைச்சர்கள், இந்திய நாட்டினுடைய தலைமை நீதிபதியை குற்றம்சாட்டிய பெண்ணின் குடும்பத்தினர், பத்திரிக்கையாளர்கள், செயல்பாட்டாளர்கள் என மூவாயிரத்திற்கும் மேற்பட்டவர்களின் கைபேசிகளை உளவு பார்த்த விவகாரம் நாட்டின் ஜனநாயகத்தின் மீதும், தனிநபர் சுதந்திரத்தின் மீதும் விழுந்துள்ள மிகப் பெரிய பேரிடி ஆகும். இந்த மென்பொருளை தயாரித்த நிறுவனம் உலகம் முழுவதும் உள்ள அரசுகளுக்கும், அதன் அமைப்புகளுக்கும் தான் இம்மென்பொருளை விற்றதாக சொல்கிறது. ஆனால், ஒன்றிய அரசு இதைப்பற்றி ஒன்றும் பேசாமல் வாய் மூடி மௌனியாக இருப்பது ஏதோ ஒரு வகையில் உண்மையை ஒத்துக் கொண்டதாகவே அமையும்.

இத்தகைய சூழலில் அச்சு மற்றும் காட்சி ஊடகங்களில் பெரும்பான்மையானவை அரசு சார்பு நிலையெடுத்துள்ளது. இது ஜனநாயகத்திற்கு நல்லதல்ல.

## முறைகேடாக பயன்படுத்தப்படும் தேசிய பாதுகாப்புச் சட்டம்

திரு.மோடி தலைமையிலான பாரதிய ஜனதா கட்சியின் ஆட்சி அமைந்ததில் இருந்து எதிர்க் குரல்களை ஒடுக்குவதிலேயே குறியாக செயல்படுகிறது. டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்திலும், டெல்லி பல்கலைக்கழகத்திலும் நடைபெற்ற ஜனநாயக பூர்வமான மாணவர்களின் போராட்டத்தை மோடியின் உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா அவர்கள் எந்த அளவுக்கு வெறிகொண்டு, தன் காவல் படைகளை வைத்து தாக்கினார் என்பதை நாடு அறியும். மாணவர் தலைவர்கள் மீதும் தேசத்துரோக வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்துத்துவா முன்வைக்கும் வரலாற்றுத் திரிபுகளையும், மூடநம்பிக்கைகளையும் எதிர்த்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய குழு உறுப்பினர் தோழர் கோவிந்த் பன்சாரே கர்நாடகத்தின் தலைசிறந்த சிந்தனையாளர் பேரா.எம்.எம். கல்புர்கி, கௌரி லங்கேஷ், பகுத்தறிவாளர் தபோல்கர் மற்றும் பல சிந்தனையாளர்கள் சங்பரிவார் அமைப்புகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர். பீமா கோரேகான் வழக்கில் “அர்பன் நக்சலைட்டுகள்”என்று குற்றம் சாட்டப்பட்டு சிறையிலுள்ள சமூக செயற்பாட்டாளர் சுதா பரத்வாஜ், கவிஞர் வரவரராவ், ஆனந்த் டெல்டும்டே போன்றவர்கள் உள்பட பலருக்கு ஜாமீன் வழங்கக் கூட இந்த அரசு தயாராக இல்லை. ஜார்கண்ட் பழங்குடி மக்கள் மத்தியில் பணியாற்றிய தமிழகத்தைச் சேர்ந்த பாதிரியார் ஸ்டேன் சுவாமி அவர்கள் சரியான சிகிச்சை வழங்கப்படாமல் கொடூரமாக கொல்லப்பட்டார் என்பது அனைவரின் நெஞ்சையும் உலுக்கும் செய்தியாகும்.

## சிஏஏ மற்றும் என்ஆர்சி பிரச்சினை

மோடி, அமித்ஷா கூட்டணி பாராளுமன்றத்தில் தங்களுக்குள்ள மெஜாரிட்டியை பயன்படுத்தி குடியுரிமை

சட்டத்தை திருத்தினர். மேலும், தேசிய குடிமக்கள் பதிவேடு கொண்டு வரப் போவதாக அறிவித்தனர். இந்த சட்டத்திருத்தத்தின் நோக்கம் இந்திய நாட்டினுடைய முக்கிய சிறுபான்மை மக்களாக உள்ள இஸ்லாமியர்களை இந்திய நாட்டின் குடிமக்கள் என்ற அந்தஸ்த்திலிருந்து அப்புறப்படுத்துவது என்பதே. இந்த சட்டத் திருத்தத்தையும் தேசிய குடிமக்கள் பதிவேடு கொண்டு வருவதையும் எதிர்த்து இஸ்லாமியர்கள் உள்பட அனைத்துப் பகுதி மக்களும் மிகக் கடுமையாக போராடி வந்தனர். கொரோனா பெரும் தொற்று வந்த காரணத்தினால் இப்போராட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஒன்றிய அரசு எந்நேரத்திலும் இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்தவும், தேசிய குடிமக்கள் பதிவேடு கணக்கெடுப்பை தொடங்கவும் வாய்ப்புகள் இருக்கின்றன. அதேபோல இதை எதிர்த்த போராட்டமும் அதை ஒட்டி வெடித்துக் கிளம்பும் வாய்ப்பும் உள்ளது. இஸ்லாமியர்களும், பட்டியலின மக்களும் பெரும்பான்மையாக வாழ்கிற இலட்சத்தீவில், அவர்களது சமூகப் பொருளாதாரப் பண்பாட்டு அடையாளங்களை மோடி அரசு திட்டமிட்டே அழித்து இந்துத்வா அடையாளங்களை அதிகார பலத்தைக் கொண்டு பலவந்தமாக திணிக்கிறார்கள்.

## ஜம்மு காஷ்மீர்

நம் நாட்டு விடுதலையின் போது நமது தேசத்தின் தலைவர்கள் உறுதியளித்தபடி ஜம்மு-காஷ்மீருக்கு சில சிறப்பு உரிமைகள் வழங்கப்பட்டன. அரசியலமைப்புச் சட்டத்தின் 370-வது பிரிவு இந்த உரிமையை உறுதி செய்துள்ளது. ஆனால், மோடி அரசு இந்த உரிமையை ரத்து செய்தது. மேலும் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தை இரண்டு யூனியன் பிரதேசங்களாகப் பிரித்து விட்டது. இது அம்மாநில மக்களின் விருப்புக்கு எதிரானதாகும் அங்கு ஒன்றிய அரசின் நிர்வாக அதிகாரிகள் மூலமாக நிர்வாகம் நடக்கின்றது. பல அடிப்படை ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. மனித உரிமைகள் தொடர்ச்சியாக மீறப்படுகின்றன. ஜம்மு-காஷ்மீருக்கு வழங்கப்பட்ட சிறப்புரிமையை ரத்து செய்வதும் பொதுசிவில் சட்டத்தை கொண்டு வருவதும் அயோத்தியில்

ராமர் கோயில் கட்டுவது என்ற இந்த மூன்றும் இந்துத்துவா சக்திகளின் முக்கிய முழக்கங்கள் ஆகும். மோடி அரசு இந்த மூன்றில் இரண்டு முழக்கங்களைப் பாராளுமன்றத்தில் தனக்குள்ள பெரும்பான்மையை பயன்படுத்தி நிறைவேற்றி விட்டது அடுத்து பொது சிவில் சட்டத்தை நோக்கி அவர்கள் பயணிக்கத் தொடங்கி விட்டார்கள்.

கடந்த சுதந்திர தின நிகழ்ச்சியில் தேசியக் கொடியேற்றி விட்டு மோடி பேசுகையில், “இனி ஒவ்வொரு வருடமும் ஆகஸ்ட் 14-ம் தேதியை தேசியப் பிரிவினை துயர நினைவு நாளாக அனுஷ்டிக்கப்பட வேண்டும்” என்று குறிப்பிட்டுள்ளது மதவெறுப்புணர்வை திட்டமிட்டே வளர்ப்பதற்கான அறிவிப்பாகவே தென்படுகிறது.

## மோடி அரசின் அயலுறவு கொள்கை

மோடி ஆட்சி பொறுப்பேற்றதிலிருந்தே அமெரிக்க சார்பு நிலையை நோக்கி முழுவதுமாக சென்றுவிட்டது. பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய பிரிக்ஸ் அமைப்பிற்கு தற்போது இந்தியா தலைமை ஏற்று உள்ளது. ஆனால், இவ்வமைப்பை பயன்படுத்தி பன்மை மைய உலகத்தை உறுதிப்படுத்த இந்தியாவின் முன்முயற்சி மிகவும் பின்தங்கியுள்ளது. அதேவேளையில் அமெரிக்கா தலைமையில் ஆஸ்திரேலியா ஜப்பான் நாடுகள் அங்கம் வகிக்கும் “குவாட்” அமைப்பில் இந்தியாவும் முனைப்போடு பங்கெடுத்துள்ளது. பாலஸ்தீன மக்களின் ஆதரவு நிலைபாட்டிலிருந்து தடம் புரண்டு இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவான நிலையை மேற்கொண்டுள்ளது. தேசிய விடுதலை இயக்கமும், ஜவஹர்லால் நேருவும் உருவாக்கி கட்டமைத்த அணிசேரா கொள்கை கைவிடப்பட்டு விட்டது. தற்போது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தொங்கு சதை கூட்டணியாக இந்தியாவை மோடி உருகுலைத்து விட்டார். பெரும்பாலான அண்டை நாடுகளோடு இணக்கமான சூழல் இல்லை. மாறி வரும் புவி அரசியலில் இந்தியா தனது இறையாண்மையை காத்துக்கொள்வதிலும், எல்லையைப் பாதுகாப்பதிலும், பயங்கரவாத அபாயத்தை எதிர்கொள்வதிலும் சுயேட்சையான முடிவுகளை எடுக்க வேண்டும்.

## தேசிய கல்விக் கொள்கை 2020

பொதுப்பட்டியலில் கல்வி உள்ளது. அதைக் காரணமாகக் கொண்டு கல்வித்துறையில் மாநிலங்களைப் புறக்கணித்து ஒன்றிய அரசே ஆக்கிரமித்துக் கொள்ளப் பார்க்கிறது .இதன் நோக்கம் தெளிவாகத் தெரிகிறது. ஹிந்தி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளை திணிப்பது மட்டுமின்றி இதர மொழி பேசும் மக்களின் மீது ஒரு பண்பாட்டுப் படையெடுப்பாக இதைப் பார்க்க வேண்டி உள்ளது. ஏற்கனவே நீட் எனும் ஒரே தேர்வின் மூலம் மாநிலங்களின் கல்வி உரிமையை ஒன்றிய அரசு பறித்துள்ளது. பறிக்கப்பட்ட கல்வி உரிமையை மீண்டும் மாநிலப் பட்டியலுக்கு கொண்டு வரவேண்டும். தமிழ்நாட்டின் இரு மொழிக் கொள்கைக்கு தேசிய கல்வி கொள்கை ஒரு ஆபத்தாக வந்துள்ளது. இந்துத்துவ சக்திகள் தாங்கிப்பிடிக்கும் வர்ணாசிரம கொள்கையை, மறு கட்டுமானம் செய்வதற்கான ஒரு வாய்ப்பாகவே தேசிய கல்வி கொள்கை 2020 அமைந்துள்ளது.

## தேசிய கடல் மீன்வள சட்டம் - 2021

கடந்த நாடாளுமன்றக் கூட்டத்தில் விவாதத்தை நடத்த அனுமதிக்காமல் மோடி அரசு இச்சட்டத்தை நிறைவேற்றியுள்ளது. இதன் மூலம் நமது நாட்டின் 7,517 கி.மீட்டர் நீளமுள்ள கடற்கரையும் 1,382 தீவுத் திட்டுகளும், 23 இலட்சம் சதுர கி.மீட்டர் கொண்ட கடல்பரப்பும் கார்ப்பரேட் கம்பெனிகளுக்கு தாரை வார்க்கப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின்படி இந்திய கடற்பகுதி மூன்றாக பிரிக்கப்படும். கரையில் இருந்து 12 கடல் மைல் வரை பிராந்தியக் கடல் என்றும், 12 முதல் 200 கடல் மைல் வரை சிறப்பு பொருளாதார மண்டலம் என்றும், 200 கடல் மைல் பரப்புக்கு அப்பால் பன்னாட்டுக் கடல் பகுதி என்றும் வரையறுக்கப்பட்டுள்ளது. இதில் 12 கடல் மைல் தூரத்திற்குள் மட்டுமே செல்ல ஒவ்வொரு முறையும் ஒன்றிய அரசுக்கு கட்டணம் கட்டி அனுமதி பெற வேண்டும்.

மேலும், மின்விசை கொண்டு இயங்கும் அனைத்துக் கலங்களுமே கப்பல் என வரையறுக்கப்படுகின்றது. இதனால் "வள்ளம் விசைப்படகுகள், 10 ஹெச்.பி. பைபர் படகுகள், நாட்டுப் படகுகள், கட்டுமரங்கள்" என அனைத்துமே கப்பல் என கொள்ளப்படும்.

இதனால் தமிழ்நாட்டில் உள்ள 38,000 நாட்டுப் படகுகளும் 6,000 விசைப்படகுகளும் "வணிக கப்பல் சட்டம் 1958"ன் கீழ் பதிவு செய்ய வேண்டும். உரிமம் பெற்ற பிறகு ஒவ்வொரு படகிலும் உரிமம் பெற்ற ஓட்டுனர் ஒருவரும், தொழில்நுட்ப வல்லுநர் ஒருவரும், இருக்க வேண்டும். குறிப்பிட்ட மீன்களைத்தான் பிடிக்க வேண்டும். மற்ற மீன்களை பிடித்தால் கடலில் திருப்பி விட்டுவிட வேண்டும். குறிப்பிட்ட அளவுக்கு மேல் பிடிக்கக் கூடாது. எந்த அனுமதிக்கப்பட்ட வலையைக் கொண்டு செல்கின்றோமோ அந்த வலையில் தான் மீன் பிடிக்க வேண்டும். வலையை மாற்றினாலும் அனுமதி பெற வேண்டும்.

இவற்றை மீறினால் முதலில் அபராதம் விதிக்கப்படும். இரண்டாம் முறை மீறினால் அபராதத்துடன் சிறைத் தண்டனை. மூன்றாவது முறை மீறினால் படகு பறிமுதல் செய்யப்படும். தொழில் செய்ய தடை விதிக்கப்படும். அபராத தொகை 5,000 முதல் 20 இலட்சம் வரை.

இச்சட்டத்தை அமல்படுத்தும் அதிகாரம் கடலோர காவல் படைக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், "மீன்வளம்" அரசியல் சட்டத்தில் மாநிலப் பட்டியலில் உள்ளது. ஆனால், ஒன்றிய அரசு தற்போது இத்துறையை இச்சட்டத்தின் மூலம் மாநில அரசுகளின் ஒப்புதல் இல்லாமல் பறித்துக் கொண்டது. கார்ப்பரேட் கம்பெனிகளின் நலனுக்காகவே இதைச் செய்துள்ளது.

## "சூழலியல் தாக்க மதிப்பீட்டு சட்டம் 2021" (EIA)

சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986ன்கீழ் சூழலியல் தாக்க மதிப்பீடு 2006 ஏற்கனவே நடைமுறையில் இருந்தது. இதன்படி எந்தவொரு திட்டமும் சுற்றுச் சூழலுக்கு ஆபத்து ஏற்படாத வகையில் உள்ளதா என ஆய்வு செய்து அரசு சார்பில் அமைக்கப்பட்ட குழு அளிக்கும் அறிக்கையின் அடிப்படையில் திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்படும்.

ஆனால், தற்போது மோடி அரசு 2சூழலியல் தாக்க மதிப்பீடு 2006"ஐ மாற்றி "சூழலியல் தாக்க மதிப்பீடு சட்டம் 2021"ஐ அறிமுகப்படுத்தி உள்ளது. இதில் 1. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அல்லது தேசிய நலன் சார்ந்த திட்டங்களுக்கு சூழலியல் மதிப்பீடு தேவையில்லை. 2. திட்டம் பற்றி மக்கள் கருத்துக் கேட்பு 30 நாட்களிலிருந்து 20 நாட்களாக குறைக்கப்படுகின்றது. 3. சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை இல்லாமலே ஒரு திட்டத்தை தொடங்கவும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள திட்டத்தை விரிவாக்கம் செய்யவும் அனுமதியளிக்கின்றது.

இதன் மூலம் சுற்றுச் சூழல் சம்பந்தப்பட்ட உலக ஒப்பந்தங்கள், இந்திய நாட்டின் சுற்றுச் சூழல், மக்களின் நலன்கள் அனைத்தும் கார்ப்பரேட் பெருமுதலாளிகளின் நலனுக்காக பலியிடப்படுகின்றன.

## ஒன்றிய அரசால் புதிதாக கொண்டு வரப்படும் வன பாதுகாப்புச் சட்டம்

இந்தியாவில் ஏற்கனவே உள்ள வன பாதுகாப்புச் சட்டம் 1980ல் திருத்தம் கொண்டு வர ஒன்றிய அரசு முனைந்துள்ளது. "வன உரிமைச் சட்டம் 2006" வழங்கியுள்ள வனப்பகுதி மக்களின் உரிமைகளை, இந்த திருத்தங்கள் மதிக்கவேயில்லை.

இந்த திருத்தங்களால் "குறிப்பிட்ட சில திட்டங்களுக்கு எந்த ஓர் முன் அனுமதியும் இன்றி காடுகளை கையகப்படுத்தவும், தேவைக்கேற்ப வன அழிப்பு செய்யவும் வழி வகுக்கின்றது. தேசிய பாதுகாப்பு திட்டம், எல்லை புறச்சாலை திட்டம், முக்கிய நெடுஞ்சாலை மற்றும் இரயில் பாதை அமைத்தல் போன்ற தேவைகளுக்கு காடுகளை சில குறிப்பிட்ட காரணங்கள் வாயிலாக எளிதாக கையகப்படுத்தும் வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்கிறது. மேலும், கார்ப்பரேட் பெருமுதலாளிகள் காட்டு வளங்களை அழிப்பதற்கு தடையில்லா சான்றிதழ் வழங்கும் நிலையை உருவாக்குகின்றது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இச்சட்டதிருத்தத்தை முழுமையாக நிராகரிக்கின்றது. மேலும், மேற்கு மலை தொடர்ச்சி அடிவாரப்பகுதியில் புலிகள் சரணாலயம் என்ற பெயரில் காலங்காலமாக

*குடியிருக்கும் வனப்பகுதி மக்களை அப்புறப்படுத்தும் அரசின் நடவடிக்கையையும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டிக்கின்றது.*

## ஒன்றிய அரசைப் பற்றிய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மதிப்பீடு

*“அமெரிக்கா தலைமையிலான உலக நிதி மூலதனம் மற்றும் வெளிநாட்டு, உள்நாட்டு பெரும் கார்ப்பரேட் நிறுவனங்களின் நலன்களுக்காகவும் ஆர்எஸ்எஸ்சின் இந்துத்வா கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் கருவியாகவும் மோடி தலைமையிலான ஒன்றிய அரசு செயல்படுகின்றது” என்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மதிப்பீடு மிகச் சரியானது என்பதை இவ்வரசின் செயல்பாடுகள் உறுதிப்படுத்துகின்றன.*

## அஇஅதிமுக ஆட்சி

*ஜெயலலிதா தலைமையிலான அஇஅதிமுக அரசு 2011இல் பதவி ஏற்றது. அச்சமயம் காங்கிரஸ் தலைமையிலான “ஐக்கிய முற்போக்குக் கூட்டணி” (யூபிஏ)அரசு ஒன்றிய ஆட்சியில் இருந்தது. கடந்த பத்து ஆண்டுகளில் நாட்டின் அரசியல் வரைபடம் முற்றிலும் மாறியுள்ளது. ஒன்றியத்திலும், பல மாநிலங்களிலும் பாஜக ஆட்சியில் உள்ளது. அதன் அதிதீவிர தாராளமய கொள்கைகள், மாநிலங்களின் உரிமைகளைப் பறித்து அதிகாரங்களை மையப்படுத்துவது, அதன் வெறுப்பு உமிழும் மதவாத அரசியல் ஆகியவை இந்தியாவும் தமிழ் நாடும் எதிர்கொள்ளவேண்டிய சவால்களாகியுள்ளன. தமிழ் நாட்டின் அரசியல் களத்திலும் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இதில் ஜெயலலிதாவின் மறைவும், அதன் பின்பு அஇஅதிமுகவின் மீதான பாஜகவின் கிடுக்குப்பிடி ஆதிக்கமும் அடங்கும்.*

## மோடி அரசின் பொருளாதாரக் கொள்கைகளுக்கு ஆதரவு

*தமிழ்நாட்டின் அரசியல் பொருளாதார போக்குகள் அகில இந்திய பொருளாதாரத்துடன் பின்னிப் பிணைந்தவை. தமிழ்நாடு மாநில அரசு கடந்த ஐந்து ஆண்டுகளில்,*

*மத்திய அரசின் அதிதீவிர தாராளமய கொள்கைகளை உறுதிபட அமலாக்கியது. அதற்கு முன்பும் இதுதான் நிலைமை என்றாலும், மத்திய மாநில முரண்பாடுகள் தொடர்பாகவாவது சில சமயங்களில் எதிர்ப்புக்குரலை அஇஅதிமுக பதிவு செய்ததுண்டு. கடந்த ஐந்து ஆண்டு அஇஅதிமுக ஆட்சியில் இதுகூட இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த காலத்தில்தான் மோடி அரசு மிக வேகமாக மாநிலங்களின் உரிமைகள் மீதும், வருமான வாய்ப்புகள் மீதும், கடுமையான தாக்குதலை நடத்திவருகிறது. இதுவும் சமகால தமிழக அரசியல் பொருளாதாரத்தின் ஒரு அம்சமாகும். கடந்த ஒரு ஆண்டுக்கும் மேலாக கோவிட் பெருந்தொற்றுக்காலத்தில் மாநிலங்களுக்கு உரிய உதவி அளிக்க மறுத்த ஒன்றிய அரசை எதிலும் எதிர்க்காத மாநில அரசுகளில் பாஜக ஆட்சியில் இல்லாத ஒரே அரசு தமிழ் நாட்டை ஆண்ட அஇஅதிமுக அரசு தான்.*

## தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் சரிவு

*அகில இந்திய பொருளாதார வளர்ச்சி சரிவு என்பது கடந்த ஏழு ஆண்டு பாஜக ஆட்சிக்காலத்தில் - குறிப்பாக 2016க்குப் பின் - தீவிரமடைந்ததை குறிப்பிட்டோம். தமிழ்நாட்டின் சில புள்ளிவிவரங்கள் தமிழ்நாட்டிலும் இதுபோன்றே நிகழ்ந்தது என்பதை தெரிவிக்கின்றன. அகில இந்திய அளவில் உள்ளதைப்போல், தமிழ் நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பின் வளர்ச்சி விகிதம் குறைந்து வருகிறது. இதன் கட்டமைப்பில் பெரிய மாற்றங்கள் இல்லை. வேளாண் மற்றும் வேளாண் சார் துறையின் பங்கு 12 சதவிகிதம் என்ற அளவிலும், ஆலை உற்பத்தி மதிப்பின் பங்கு 20 சதவிகிதத்தை ஒட்டியும், சேவைத்துறையின் பங்கு 55 சதவிகிதம் என்ற அளவிலும் உள்ளன. வேளாண்துறை வருமானத்தை பிரதானமாக சார்ந்து நிற்கும் குடும்பங்களின் சதவிகிதம் குறைந்துள்ள போதிலும், இன்றும் கிராமப்புறங்களில் பெரும்பாலான குடும்பங்கள் தங்களது மொத்த வருமானத்தில் ஓரளவாவது சாகுபடி அல்லது கூலிவேலை மூலம் பெறும் வருமானம் வேளாண்துறை சார்ந்ததாக உள்ளன. ஆனால், தாராளமய கொள்கைகள் வேளாண்துறையை கடுமையாக*

பாதித்துள்ள நிலையில் - குறிப்பாக, பயிர் சாகுபடியில் நிகர வருமானம் பெறுவது சிறு, குறு, நடுத்தர விவசாயிகளுக்கு மிகவும் கடினமாகியுள்ள பின்னணியில் - மாநில மொத்த உற்பத்தி மதிப்பு அதிகரிக்கும் பொழுதும் பெரும்பாலான கிராமப்புற மக்களுக்கு பொருளாதார நிலைமை உயர்வதில்லை. தமிழக கிராமங்களில் கிட்டத்தட்ட அனைத்து உழைப்பாளர் குடும்பங்களும், சிறு உடைமையாளர் மற்றும் உற்பத்தியில் ஈடுபடுவோர் என்று மட்டுமின்றி பல துறைகளில் கிடைக்கின்ற வேலை வாய்ப்புகளை தேடிக் கண்டுபிடித்து சம்பளத்திற்கு கடுமையாக உழைத்தால்தான் தங்கள் குடும்பங்களை பராமரிக்க முடியும் என்ற இடத்தில் உள்ளதை நமக்கு தெரிவிக்கின்றன. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட சில ஆய்வுகளின்படி ஏழை விவசாயிகளும், குறைதொழில்திறன், பகுதி தொழில் திறன் சார்ந்த உடல் உழைப்பு பணிகளில் ஈடுபட்டு கடும் உழைப்பை செலுத்திவரும் உழைப்பாளி மக்களும் கிராமப்புற குடும்பங்களில் கிட்டத்தட்ட சரிபாதி என்ற அளவில் உள்ளனர். இந்த உழைப்பாளிக் குடும்பங்களின் மாதாந்திர வருமானம் தலா இரண்டாயிரம் ரூபாய்க்கும் குறைவாகவோ, அல்லது சற்றுக் கூடுதலாகவோதான் உள்ளது.

## தமிழ்நாட்டில் தொழிலாளர்களின் நிலை

நகர்ப்புற ஆலை தொழிலாளர்களின் நிலைமையும் மோசமாகத்தான் உள்ளது. ஆண்டுதோறும் மத்திய புள்ளியியல் நிறுவனம் மேற்கொள்ளும் தொழிற்சாலைகள் பற்றிய வருடாந்திர ஆய்வு 2018-19இன்படி, தமிழ்நாட்டில் 38,131 ஆலைகள் இருந்தன. அவற்றில் 21,12,058 தொழிலாளிகள் பணிபுரிந்தனர். அவர்களது சராசரி ஆண்டு வருமானம் ரூ.1.5 லட்சம் தான். (மாதம் 12,500 ரூபாய்). இந்த 21 லட்சம் தொழிலாளிகள் முதலாளிகளுக்கு ஒரு ஆண்டில் ஈட்டிக்கொடுத்த லாபம் சுமார் ஐம்பதாயிரம் கோடி ரூபாய்களாகும்! முறைசாரா தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் நிலைமையும் ஒட்டுமொத்த பொருளாதார நெருக்கடியால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. ஒன்றிய அரசின் தொழிலாளர் விரோத கொள்கைகளை

அப்படியே பின்பற்றிய அஇஅதிமுக அரசு முறை சாரா தொழிலாளர்களுக்கு கடந்த காலங்களில் உருவாக்கப்பட்ட நல வாரியங்களையும் முடக்கியது.

ஆனால், ஒன்றிய, மாநில அரசுகளைப் பொறுத்தவரை பொருளாதார வளர்ச்சி விகிதத்தை உயர்த்துவது என்ற பெயரில் பன்னாட்டு, இந்நாட்டு பெருமுதலாளிகளுக்கும் செல்வந்தர்களுக்கும் வரி மற்றும் இதர சலுகைகளை அளித்து அவர்களை முதலீடுகள் மேற்கொள்ள "ஊக்குவிப்பது" தான் அரசின் நோக்கம். மேலும் "முதலீட்டாளர்களின்" களத்தை விரிவுபடுத்த பொதுத்துறை நிறுவனங்களை வேகமாக பெருமுதலாளிகளுக்கு விற்பது என்பதும் அவர்கள் கொள்கைகளின் முக்கிய அம்சம். முதலாளிகளின் இலாப வேட்டை சிக்கலின்றி நடந்திட உழைக்கும் வர்க்கம் போராடிப் பெற்ற குறைந்தபட்ச உரிமைகளையும் அழிக்கும் சட்டங்களை மத்திய அரசு கொண்டுவந்ததும், அவற்றை நிறைவேற்ற தமிழகத்தை ஆண்ட அஇஅதிமுக கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் முழுஆதரவு அளித்ததையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். இது ஒன்றிய அரசு பாராளுமன்ற நெறிமுறைகளை காலில் போட்டு மிதித்து நிறைவேற்றியுள்ள வேளாண் சட்டங்களுக்கும் பொருந்தும். மத்திய அரசின் அனைத்து மக்கள் விரோத சட்டங்களுக்கும், நடவடிக்கைகளுக்கும் அஇஅதிமுக கட்சியும், அதன் அரசும் ஆதரவு அளித்து வந்தது அவர்களின் தாராளமய அணுகுமுறையை வெட்டவெளிச்சமாக்குகிறது.

## தமிழ்நாட்டின் வேளாண் நெருக்கடி

கடந்த பல ஆண்டுகளாக தமிழக விவசாய உற்பத்தி மதிப்பு சரிவில் உள்ளது. பெரும் ஏற்ற இறக்கங்களை கொண்டதாகவும் உள்ளது. நெல் மற்றும் உணவு தானியங்கள், சர்க்கரை பயிர்கள் மற்றும் எண்ணெய்வித்துக்கள் ஆகியவற்றின் உற்பத்தி மதிப்பு சரிந்துள்ளது. பருப்புவகைகள் மற்றும் ஃபைபர்கள் ஏற்ற இறக்கம் காட்டுகின்றன. கனி மற்றும் காய்கள் மட்டுமே வளர்ச்சி மதிப்பு காட்டுகின்றன.

இக்காலத்தில் நெல் மற்றும் தானியங்களின் மகசூல் அளவிலும் ஏற்ற இறக்கம் அதிகமாக உள்ளது. தொடர்ச்சியான உயர்வு இல்லை.

2015-16 ஆம் ஆண்டு வேளாண் கணக்கெடுப்பின்படி, தமிழ் நாட்டில் சாகுபடி செய்பவர்களில் 93 சதவிகிதம் பேர் ஐந்து ஏக்கர் அல்லது குறைவான நிலத்தில் சாகுபடி செய்கின்றனர். இவர்களது சாகுபடி பரப்பளவு மொத்த சாகுபடி பரப்பளவில் 62 சதவிகிதம் ஆகும். மீதம் உள்ள 7 சதவிகித சாகுபடியாளர்கள் கையில் மீதம் 38 சதவிகித சாகுபடி நிலம் உள்ளது. ஆகவே, தமிழ் நாட்டின் விவசாயத்தில் கணிசமான வருமானம் பெறும் இடத்தில் இருப்பவர்கள் மொத்த சாகுபடியாளர்களில் ஒரு சிறிய பகுதியினர் தான். அரசின் பல வேளாண்சார் சிறப்பு திட்டங்களும் முனைவுகளும் பெருமளவிற்கு இந்த சிறிய வசதியான பகுதியினருக்கு மட்டுமே கிடைக்கிறது. அரசின் பல மானியம் சார்ந்த திட்டங்கள் பெரும்பாலும் இயந்திரமயமாக்கலை ஊக்குவிப்பதாகவும் வசதியான, தனிநபர் சார்ந்த பாசன ஏற்பாடுகளை வலுவாக்கும் வகையிலும் அமைகின்றன. பெரும்பகுதி விவசாயிகளும், விவசாய தொழிலாளர்களும் பயன் அடைவதில்லை. முழுமையான நிலச்சீர்த்திருத்தங்கள் தமிழ் நாட்டில் நடைபெறாத சூழலில் இதில் வியப்பு இல்லை. ஊரக வேலை உறுதி திட்டம் மட்டுமே ஏழை விவசாயிகளுக்கும் விவசாயத் தொழிலாளிகளுக்கும் ஓரளவாவது வருமானம் தரும் திட்டமாக உள்ளது. அதிலும் மோடி ஆட்சி ஒதுக்கீடுகளை குறைத்தும், நெறிமுறைகளை மாற்றியும் இத்திட்டத்தால் கிடைக்கும் பயன்களை சுருக்கியுள்ளது.

தமிழ் நாட்டின் விவசாயத்தின் தேக்கத்தை உடைக்க ஒன்றிய, மாநில அரசுகளின் கொள்கைகளில் பெரும் மாற்றம் தேவை. தாராளமய கொள்கைகளை கைவிடாமல் விவசாயத்தையும் விவசாயிகளையும் பாதுகாப்பது இயலாது. நில உறவுகளில் அனைத்து ஏழை உழைப்பாளிகளுக்கும் சாதகமான மாற்றங்கள் தேவை. ஆனால், அஇஅதிமுக அரசு மோடியின் ஒன்றிய அரசுக்கு முன்பாகவே கார்ப்பரேட்

நிறுவனங்களுக்கு ஆதரவான தமிழ்நாடு வேளாண் உற்பத்தி மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணைகள் மற்றும் சேவைகள்(ஊக்கப்படுத்துதல் மற்றும் எளிமைப்படுத்தல்) சட்டம் 2019-ஐ நிறைவேற்றியது.

## தமிழ்நாட்டில் நதிநீர் சிக்கல்

இந்தியாவிலேயே ராஜஸ்தான் மாநிலத்திற்கு அடுத்தபடியாக மழை குறைவாக உள்ள மாநிலம் தமிழ்நாடு தான்.இந்தியாவின் ஆண்டு சராசரி மழையளவு 2500 மில்லி மீட்டர். ஆனால், தமிழ்நாட்டில் மழைபொழிவு 950 மில்லி மீட்டர் மட்டுமேயாகும்,மேற்கு தொடர்ச்சி மலையின் மறைவு பிரதேசத்தில் தமிழகம் இருப்பதால், தென்மேற்குப் பருவக்காற்றின் மூலம் கிடைக்கக்கூடிய மழைவளத்தை பெறமுடிவதில்லை. கேரள மற்றும் கர்நாடக மாநிலத்திற்கு கிடைப்பதுபோல் தென்மேற்கு பருவக்காற்று மழை தமிழ்நாட்டுக்கு கிடைப்பதில்லை, வடகிழக்கு பருவமழை சிலநாட்களில் பெரு மழையாக கொட்டி கடலோர மாவட்டங்களில் வெள்ளப்பெருக்காகி பெரும் சேதத்தை ஏற்படுத்தி கடலில் கலந்துவிடுகிறது.ஒரு ஆண்டிற்கு 23 நாட்கள் மட்டுமே மழைப்பொழிவு தமிழ்நாட்டில் கிடைக்கிறது, அதுவும் சமயத்தில் பெரு மழையாக கொட்டி வெள்ளப்பெருக்கு ஆகிவிடுகிறது.

## தாமிரபரணி ஆறு

தமிழகத்தில் உற்பத்தியாகி தமிழகத்திலேயே பாயும் நதி தாமிரபரணி மட்டுமே. தமிழகத்தின் நீரின்தேவையில் பெரும்பகுதியை பூர்த்தி செய்யும் காவிரி, தென்பெண்ணை, பாலாறு முல்லை பெரியார், போன்ற நதிகள் அண்டை மாநிலங்களில் உற்பத்தியாகி தமிழகத்திற்குள் அதிகம் பாய்கிறது. எனவே, நதி நீரைப் பங்கிட்டுக் கொள்வதில் அண்டை மாநிலங்களோடு சிக்கல்கள் நீடித்து வருகிறது,

## காவிரி பிரச்சினை

தமிழகத்தின் முதன்மை நதி காவிரி என்பதை நாம் அறிவோம். காவிரி கர்நாடக மாநிலம் குடகு என்ற இடத்தில் உற்பத்தியாகிறது. காவிரி ஆறு , கர்நாடகத்தில் 320 கிலோ மீட்டர் தூரமும் தமிழ்நாட்டில் 416 கிலோ மீட்டர் தூரமும் இரு மாநில எல்லையில் 64 கிலோ மீட்டர் தூரமும் ஓடுகிறது.தமிழகம் முழுவதும் 28, 20 800 ஏக்கர் நிலங்கள் காவிரியை நம்பியே உள்ளன. பல மாவட்டங்களின் குடிநீர் ஆதாரமும் காவிரிதான். காவிரி கர்நாடகத்தில் உற்பத்தியாவதால் கர்நாடக அரசு காவிரியின் முழு உரிமையும் எடுத்துக் கொண்டு கீழ் நோக்கி பாயும் மாநிலங்களுக்கு யாசகம் அளிக்கின்ற மனநிலையில் செயல்பட்டு வருகிறது. 1892, 1924 ஆண்டுகளில் போடப்பட்ட ஒப்பந்தங்களை மீறுவது, பன்னாட்டு நதிநீர் தாவா சட்டம் மற்றும் 1956ம்ஆண்டில் இயற்றப்பட்ட மாநிலங்களுக்கு இடையிலான நதிநீர் தாவா சட்டத்தையும் மதிக்காமல் கர்நாடக அரசு செயல்பட்டு வருகின்றது. இந்நிலையில் விபி சிங் பிரதமராக இருந்தபோது உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி 1990 ம் ஆண்டுநடுவர் மன்றம் அமைக்கப்பட்டது. 1991 ல் நடுவர் மன்ற நீதிபதிகள் தமிழகத்தில் காவிரி பாசனப் பகுதிகளைப் பார்வையிட வந்தபோது ,தமிழ்நாடு விவசாய சங்கம், விவசாய தொழிலாளர் சங்கமும் பல்வேறு அமைப்புகளையும் இணைத்து தஞ்சையிலிருந்து வேதாரணியம் வரை 110 கிலோமீட்டர் மனிதச்சங்கிலி சுவர் அமைத்து தங்களின் நியாயங்களை உணர வைத்தனர்.1991ல் நடுவர் மன்றம் இடைக்காலத் தீர்ப்பாக தமிழகத்திற்கு 199 டிஎம்சியும் பாண்டிச்சேரிக்கு 6 டிஎம்சி தண்ணீரையும் வழங்க வேண்டும் என உத்தரவிட்டது, அதற்குப்பின் 17 ஆண்டுகள் கழித்து 05.02. 2007 அன்று நடுவர் மன்றம் இறுதித் தீர்ப்பு வழங்கியது. இடைக்காலத்தீர்ப்பைவிட குறைவாக 185 டிஎம்சி தண்ணீர் வழங்க வேண்டும் என்று குறைத்து தீர்ப்பளித்தது. இந்த தீர்ப்பையும் கர்நாடக அரசு அமல்படுத்த வில்லை. ஆண்டு தோறும் ஜூலை தொடங்கி மே மாதம் வரை வழங்க வேண்டிய நீரை போராடித்தான் பெற வேண்டியுள்ளது.இந்நிலையில் மேகதாது அணை

மேலும் ஒரு புதிய சிக்கலாக அமைந்துள்ளது. ஒகேனக்கலில் இருந்து 15 கிலோமீட்டர் தொலைவில் கர்நாடக மாநிலம் ராம்நகர் மாவட்டம் மேகதாது என்ற இடத்தில் கிருஷ்ணா சாகர் அணையை விட கூடுதலாக 67.16 டிஎம்சி தண்ணீரை தேக்கி வைக்கும் அளவிற்கு ஒரு புது அணையை கட்டுவதற்கு ஆயத்த வேலையில் இறங்கியுள்ளது. கீழ் நோக்கி பாயும் மாநிலங்களின் அனுமதி பெற்றே கட்ட வேண்டும் என்கிற அடிப்படை ஒப்பந்தங்களை மீறி கட்ட ஆரம்பித்து உள்ளது. இதை எதிர்த்து தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளது. இந்த அணை கட்டப்பட்டால் தமிழ்நாட்டிற்கு காவிரியில் இருந்து ஒரு சொட்டு தண்ணீர் கூட கிடைக்காது.

## தென்பெண்ணை

கர்நாடக மாநிலம் நந்தி மலையில் உற்பத்தியாகும்' பெண்ணையாறு' தமிழகத்தில் கிருஷ்ணகிரி, தர்மபுரி' திருவண்ணாமலை 'கள்ளக்குறிச்சி விழுப்புரம் 'கடலூர் ஆகிய மாவட்டங்களின் வழியாக பாய்ந்தோடி வங்கக் கடலில் கலக்கிறது. இந்த ஆற்றை நம்பிதான் சுமார் 40 ஆயிரம் ஏக்கர் விளை நிலங்கள் மேற்கண்ட மாவட்டங்களில் பாசன வசதி பெறுவதோடு குடிநீர் ஆதாரதிற்கும் நம்பியுள்ளது, கர்நாடகத்திற்குள் 112 கிலோமீட்டர் மட்டுமே ஓடும் தென்பெண்ணையாறு தமிழகத்தில் சுமார் 320 கிலோ மீட்டர் தூரத்திற்கு பாய்கிறது. காவிரி நீரை முழுவதும் அபகரிக்க நினைக்கும் கர்நாடக அரசு தென்பண்ணை பாசனத்தையும் முழுமையாக கர்நாடகத்திற்குள்ளேயே திருப்பிவிடும் நோக்கத்தோடு தென்பெண்ணைஆற்றின் துணை ஆறாக உள்ள மார்க்கண்டேய நதியில் பெரிய அணையைக் கட்டி முடித்திருக்கிறது.

## 'யார் கோள் அணை

கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனஹள்ளி ஒன்றியத்திற்குட்பட்ட நாச்சிக்குப்பம் கிராமத்திலிருந்து 8வது கிலோ மீட்டர் தொலைவிலுள்ள மேல் காட்டுப்பகுதி வழியாக சென்றால் கர்நாடக மாநில வனப் பகுதியான

‘யார் கோள்’ ,என்ற இடம் வருகிறது ‘யார்கோள்’பகுதியில் உள்ள பள்ள முகட்டில் தான் புதிய பாதை அமைத்து 430 மீட்டர் நீளம் 162 அடி உயரமும் கொண்ட பெரிய அணையை கர்நாடக அரசு கட்டி இருக்கிறது.கர்நாடக அரசிடம் இதுபற்றி கேட்டபோது கதவு போடாத தடுப்பணை தான் கட்டி உள்ளோம் என்று வாதம் செய்கிறது. இந்த அணை கட்டப்படுவதால் மேற்கண்ட மாவட்டங்களில் பாசனத்துக்கும் குடிநீருக்கும் பெரும் பாதிப்பு ஏற்படும் .

## முல்லை பெரியார் அணை

பெரியாறு அணை கேரளத்தில் மேற்கு நோக்கிப் பாயும் “பெரியாற்றின் “மேல் 1895இல் பெரிய நீர்த்தேக்கம் உருவாக்கப்பட்டு, மலையை குடைந்து கிழக்கு நோக்கி பாயும் வைகை நதியில் இணைக்கப்பட்டது.இதனால் கடந்த 100 ஆண்டுகளுக்கும் மேலாக பெரியாறு நீர் வளத்தைப் பயன்படுத்தி ஒன்றுபட்ட மதுரை ராமநாதபுரம் மாவட்டங்களில் சுமார் 2 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்று வருகிறது.அணைகட்டும் நீர்பிடிப்பு பகுதியும் கேரள எல்லைக்குள் இருப்பதால் அணையின் கட்டுமானம் பலவீனமாக உள்ளது என்றும் பலப்படுத்தினால் தான் 152 அடி தண்ணீரை தேக்க அனுமதிக்கலாம் என்றும் அதுவரை 136 அடி தண்ணீர் மட்டுமே தேக்க வேண்டும் என்றும் கேரள அரசு கூறி வருகிறது. தேசிய ஆணையத்தின் ஆலோசனைப்படி தமிழக அரசு 18 கோடி செலவிட்டு அணையைப் பலப்படுத்தியது.பணி நிறைவடைந்துள்ள நிலையில் கேரள அரசு மீண்டும் அணையின் பலம் குறித்த சந்தேகத்தை தொடர்ந்து எழுப்பி 152 அடி தண்ணீரை தேக்க முடியாது ஒப்பந்தம் முடிந்து விட்டது என்று கூறி வருகிறது. இந்நிலை நீடித்தால் மேற்கண்ட மாவட்டங்கள் பாலைவனமாவதை யாராலும் தடுக்க முடியாது.

## பாலாறு

தமிழ்நாட்டில் வடமாவட்டங்களுக்கு வளம் சேர்க்கின்ற பாலாறு கர்நாடக மாநிலத்தில் கோலார் மாவட்டத்தில் 4762 அடி உயரமுள்ள சென்னகேசவ மலைத்தொடரில்

உற்பத்தியாகிறது. பாலாறு கர்நாடகத்தில் 82 கிலோ மீட்டர் பயணம் செய்து ஆந்திரத்தை அடைகிறது. ,தமிழகத்தின் எல்லையான வேலூர் மாவட்டம் புள்ளூர் என்ற இடத்தில் ஆந்திர மாநிலத்திலிருந்து தமிழகத்திற்குள் நுழைகிறது. தமிழ்நாட்டில் 242 கிலோமீட்டர் தூரம் பயணம் செய்து காஞ்சிபுரம் மாவட்டம் சதுரங்கப்பட்டினம் என்ற இடத்தில் கடலில் கலக்கிறது. திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம் ,ஆகிய மாவட்டங்களில் பாசனத்துக்கும் குடிநீருக்கும் ஆதாரமாக இருந்து வருவது இந்த பாலாறு தான்.பாலாற்றின் குறுக்கே ஆந்திரா மற்றும் கர்நாடக அரசுகள் 1892-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை மீறி கர்நாடக அரசு இரண்டு தடுப்பணைகளையும் ஆந்திர மாநில அரசு 28 தடுப்பணைகளையும் கட்டி உள்ளது. மேலும், வேலூர் மாவட்டத்தில் பாலாற்றின் கரையைச் சுற்றி சுமார் 1000 தோல் தொழிற்சாலைகள் உள்ளன. சராசரியாக ஒரு ஆண்டுக்கு 13.5 மில்லியன் கழிவுநீர் ஆற்றில் விடப்படுகிறது. இதனால் நிலத்தடி நீர் மாசடைந்து பெரும் குடிநீர் தட்டுப்பாடு மாவட்டங்களில் ஏற்பட்டு வருகிறது.

ஆறுகளின் நிலைதான் இப்படி என்றால் தமிழ்நாட்டில் மன்னர்கள் காலத்திலும் பிறகு ஆட்சி செய்த வெள்ளைக்காரர்கள் காலத்திலும் 40 ஆயிரம் ஏரி குளங்கள் வெட்டப்பட்டு மழைநீர் காலத்தில் மழை நீரை தேக்கி வைத்தனர். இவைகளில் பெரும்பகுதி ஏரி குளங்கள் தற்போது காணவில்லை. இப்படி பெரும் நீராதார தட்டுப்பாட்டை எதிர்கொள்ளும் நிலையில் தமிழகம் இருக்கிறது .

## தமிழ் நாட்டின் பொருளாதாரத்தை தீர்மானிக்கும் கார்ப்பரேட்டுகள்

கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாகவே தனியார் முதலாளிகளை, குறிப்பாக அந்நிய, மற்றும் இந்தியப் பெரும் கம்பெனிகளை, தமிழ் நாட்டில் முதலீடுகள் செய்ய வைக்கும் வகையில் அவர்களுக்கு ஏராளமான வரிச்சலுகைகள் மாநில அரசால் அளிக்கப்படுகின்றன. மேலும், இக்கம்பெனிகள் தங்கு தடையின்றி உற்பத்தியை மேற்கொள்ள வசதியாக,

அவர்களுக்கு நிலம், நீர், மின்சாரம் உள்ளிட்ட அனைத்து துணை வசதிகளும் உத்தரவாதமாகவும், சலுகை விலையிலும் அளிக்கப்படுகின்றன. உற்பத்தி தங்கு தடையின்றி நடந்திட தொழிலாளிகளின் தொழிற்சங்க உரிமைகளும், இதர ஜனநாயக உரிமைகளும் குறுக்கப்பட்டன. இது தான் ஹூண்டாயிலும், நோக்கியாவிலும், ஃபாக்ஸ்கானிலும், ஃபோர்டிலும் இன்ன பிற பன்னாட்டு, இந்நாட்டு பெரும் கம்பெனிகளின் ஆலைகளிலும் நாம் காண முடிந்தது. அந்நிய, இந்திய கம்பெனிகளுடன் முதலீட்டுக் கொள்கை என்ற பெயரில் அரசுகள் போட்டுக்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பெரும்பாலும் வெளிச்சத்திற்கே வரவில்லை. அதில், தமிழ் நாட்டு வளர்ச்சிக்கு தீங்கு விளைவிக்கின்ற பல்வேறு நிபந்தனைகள் உள்ளடங்கியுள்ளன.

தமிழ்நாட்டில் பத்தாண்டு காலம் ஆட்சியில் இருந்த அஇஅதிமுக அரசு தொழில் மற்றும் கட்டமைப்பு வளர்ச்சி என்பதை தனியார்துறை பெருமுதலாளிகள் மூலம் அரசின் மான்யங்களுடன் அமலாக்கவேண்டும் என்ற நிலைபாட்டில் உள்ளது. அதானி, அம்பானி போன்ற பெருமுதலாளிகள் தமிழ்நாட்டின் மாநில அரசின் முழு ஆதரவுடன் வலுவாக களம் இறங்கியுள்ளனர். உலக முதலீட்டாளர் மாநாடுகள் நடத்தப்பட்டு, அதன் அடிப்படையில் பல அறிவிப்புகள் வந்துள்ளன. இதில், ஒரு விஷயத்தை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அரசு முதலீட்டாளர்களுக்கு அளிக்கும் சலுகைகள், ஊக்கங்கள் வேலை வாய்ப்பை உருவாக்குவதுடன் இணைக்கப்படுவதில்லை. சலுகைகள் என்ன என்பதையும் பகிரங்கப்படுத்துவதில்லை.

## சிறு குறு தொழில் முனைவோர் பிரச்சினைகள்

உள்நாட்டு சிறு குறு தொழில்முனைவோர் கடும் நெருக்கடியை சந்தித்து வருகின்றனர். ஆனால், அவர்களுக்கு அரசின் உதவி கிடைப்பதில்லை. மறுபுறம் தாராளமய கொள்கைகளின் கீழ் சிறுகுறு தொழில்களுக்கு என்று ஒதுக்கப்பட்டிருந்த அனைத்து துறைகளும் ஏறத்தாழ பெரும் கம்பனிகளுக்கு திறந்து விடப்பட்டுள்ளன. கடன் வட்டி விகிதங்கள் உயர்வு, மின்சார பற்றாக்குறை உள்ளிட்ட

தாராளமய கொள்கைகளின் விளைவுகள் சிறுகுறு, நடுத்தர தொழில்களை கடுமையாக பாதித்துள்ளன. இது வேலை வாய்ப்பையும் பாதித்துள்ளது. பொதுத்துறை முதலீடுகள் வெட்டப்பட்டு உள்கட்டமைப்பு வசதிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. இதுவும் தொழில் துறை வளர்ச்சியையும், அதன் தன்மையையும் பாதித்துள்ளது. அஇஅதிமுக ஆட்சியில் அரசு போக்குவரத்து துறை உள்ளிட்டு அனைத்து பொதுத்துறை நிறுவனங்களிலும் தொழிலாளர் விரோதப்போக்கும் மக்கள் விரோதப்போக்கும், வலுப்பெற்றன.

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியிலும், குறிப்பாக ஆலை உற்பத்தியிலும், கடந்த பத்து ஆண்டுகளில் உற்பத்தி வளர்ச்சி விகிதம் சரிந்து வந்தாலும் உற்பத்தி பெருக்கம் நிகழ்ந்துள்ளது. நவீனமயமாக்கல் தொடர்கிறது. உற்பத்தியின் கட்டமைப்பு மாறியுள்ளது. ஆனால், இந்த வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக இருந்த ஆலை தொழிலாளிகளின் வாழ்க்கையில் முன்னேற்றம் மிகவும் குறைவாகவும், உறுதியற்றதாகவும்தான் உள்ளது. ஆலை, உற்பத்தி துறையின் கடந்த பத்தாண்டு கால வளர்ச்சி உழைப்பாளி மக்களுக்கு வேலை இழப்பையும் அதிகமான உழைப்புச் சுரண்டலையுமே பரிசாக அளித்துள்ளது. தொழில் துறையின் இதர பகுதிகளான கட்டுமானம், மின்சாரம், எரிவாயு மற்றும் தண்ணீர் வழங்கல் ஆகியவற்றை பொறுத்தவரையில் கட்டுமானம் மட்டுமே வேகமான வளர்ச்சியை கண்டுள்ளது. அங்கும் இயந்திரங்கள் வேகமாக நுழைந்தபின் வேலை வாய்ப்புகள் சுருங்கிவருகின்றன.

## மின் உற்பத்தி நெருக்கடி

மின் உற்பத்தி துறை நெருக்கடியில் தொடர்வதை நாம் அறிவோம். 1990களிலேயே பொதுத்துறையில் முதலீடுகளை மேற்கொண்டு மின் உற்பத்தி திறனை பெருக்குவதற்குப் பதில் இத்துறையை தனியாருக்கு திறந்துவிட்டு அவர்களிடம் இருந்து பணம் கொடுத்து மின்சாரம் வாங்கும் தாராளமய கொள்கைகள் துவங்கின. அகில இந்திய அளவிலும் தமிழகத்திலும் கடந்த பத்து

ஆண்டுகளாக இவை தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் மக்களின் தேவைகள் பின்னுக்குத் தள்ளப்பட்டு தனியார் நிறுவன இலாபம் மட்டுமே முதன்மைப்பட்டுள்ளது.

## தமிழ்நாட்டின் சேவைத்துறை

தமிழ் நாட்டின் உள்நாட்டு உற்பத்திமதிப்பில் சேவைத்துறையின் பங்கு சுமார் 55 சதவிகிதம். கடந்த பத்து ஆண்டுகளில் இதன் வளர்ச்சி பொருளுற்பத்தித் துறைகளான வேளாண்மை மற்றும் தொழில் துறைகளை காட்டிலும் அதிகமாக உள்ளது. ஆனால், இத்துறையில் வங்கி, இன்சூரன்ஸ், தகவல் தொழில்நுட்பம் ஆகிய ஒரு சிறியபகுதியில் மட்டுமே உழைப்பவர்களின் ஊதியம் ஓரளவு சுமாராகவாவது உள்ளது. பிற சேவைத்துறைகளில் உழைப்பாளர் நிலைமை குறைந்த வருமானம், பணிபாதுகாப்பற்ற தன்மை என்றுதான் உள்ளது. ஆளும் தமிழக அரசு மிகக்குறைந்த ஊதியம் பெற்று அரும்பணியாற்றிவரும் ஆஷா, அங்கன்வாடி, மதிய உணவு திட்டம் உள்ளிட்ட அரசின் மக்கள்சார் சமூகநல திட்ட ஊழியர்களுக்கு நியாயம் வழங்க மறுத்து வருவதை நாம் அறிவோம். சேவைத்துறை என்பது பெரும்பாலும் குறைந்த ஊதியத்தில் அதிக நேரம் பணிபுரியும் உழைப்பு நிலைமைகள் கொண்டதாகவே உள்ளது.

## தமிழ் நாட்டின் வேலையின்மை பிரச்சினை

கடந்த பத்தாண்டுகளில் தமிழ் நாட்டின் வளர்ச்சியில் ஆகப்பெரிய பிரச்சினையாக முன்வந்திருப்பது வேலையின்மை பிரச்சினை ஆகும். இதை எதிர்கொள்ள ஆளும் அரசு எந்த முன்முயற்சியையும் எடுக்கவில்லை. மாறாக, வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்குப் பதில் இயந்திரமயமாக்கலை ஊக்குவித்தும், தனியார்மய நடவடிக்கைகள் மூலமும் எதிர்த்திசையில் பயணிக்கிறது. வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து காத்திருப்போர் எண்ணிக்கை ஒரு கோடியைத் தாண்டிவிட்டது. தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு குறைந்துவருகிறது. எடுத்துக்காட்டாக, தமிழக அரசு

வெளியீடான மாநில புள்ளி விவர கையேட்டின் - 2019படி, 2016 இல் இது 17,66,889 ஆக இருந்தது. ஆனால், 2017 இல் 16,60,603 ஆக குறைந்துள்ளது. ஒருலட்சத்திற்கும் அதிகமான சரிவு ஒரு ஆண்டில் நிகழ்ந்துள்ளது. அஇஅதிமுக அரசு வேலையின்மையை பெரிய பிரச்சினையாக கருதவில்லை. இது ஆபத்தான போக்காகும்.

## சுற்றுச்சூழல் மற்றும் இயற்கைப் பேரிடர்

அண்மைக் காலங்களில் புயல்கள், அதிதீவிர மழைப்பொழிவு உள்ளிட்ட இயற்கை பேரிடர்கள் தமிழ் நாட்டை பாதித்துள்ளன. இவற்றை எதிர்கொள்ள உதவி செய்வதில் ஒன்றிய அரசின் பங்கு மிகக் குறைவாகவே உள்ளது. மாநிலத்தின் தேவைகளை ஒன்றிய அரசுடன் போராடிப்பெற மாநில அரசு முன்வருவது இல்லை. ஒன்றிய அரசால் உதவி மறுக்கப்படும் மாநில அரசு வளங்களை திரட்டும் வாய்ப்புகளை கண்டறிந்து செயல்படுவதில் முனைப்பு காட்டுவதில்லை. இதனால், தமிழக விவசாயிகளும், மீனவர்களும் இதர விளிம்புநிலை மக்களும் கடும் பாதிப்புகளுக்கு உள்ளாகி வருகின்றனர். மாநில அரசு கடன் ரத்து உட்பட சில நடவடிக்கைகளை அரசியல் ஆதாயம் கருதி மேற்கொண்டாலும் தேவைக்கு மிகவும் குறைவாகவே இவை அமைகின்றன. பெரும் பகுதி விளம்பரமாகவே முடிந்துவிடுவதும் உண்டு.

மறுபுறம் சுற்றுச்சூழல் பிரச்சினைகளில் மக்கள் நலனை முன்வைத்து மாநில அரசு செயல்படுவதில்லை. தாராளமய கொள்கையின்படி, கம்பெனிகளின் இலாபக்கணக்கு மட்டுமே முதன்மையாக கருதப்படுகிறது. காவிரி டெல்டா பகுதி பிரச்சினைகள், எட்டுவழிச் சாலை, தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை பிரச்சினை, கடலோரப்பகுதி சூழல் மேலாண்மை, வனப்பாதுகாப்பு போன்ற பிரச்சினைகளில் அரசு சூழல் பாதுகாப்பின் அவசியத்தைவிட கம்பெனிகளின் இலாப நோக்கங்களுக்கு முன்னுரிமை கொடுத்து செயல்பட்டது. சூழல்பாதுகாப்பு என்ற பெயரில் அனைத்து வளர்ச்சி திட்டங்களையும் எதிர்ப்பது தவறு. ஆனால், ஜனநாயக

நெறிமுறைகளையும் அறிவியல்பூர்வமான ஆய்வுகளையும் புறந்தள்ளி, கம்பெனிகளின் இலாபம் மட்டுமே இலக்கு என்ற பார்வை சுற்றுச் சூழலுக்கும் மக்களுக்கும் பெரும் கேடு விளைவிக்கும்.

## கல்வி மற்றும் சுகாதாரம்

கல்வி மற்றும் சுகாதார துறைகளில் கடந்த காலங்களில் தமிழ்நாடு குறிப்பிடத்தக்க அளவு செயல்பட்டது. ஆனால், அஇஅதிமுக மாநில அரசின்கீழ் கல்வியும், மக்கள் நல்வாழ்வும் வேகமாக தனியார், மற்றும் வணிக மயமாகின. மாநில அரசின் சிக்கன நடவடிக்கைகள், சமூக பாதுகாப்பு திட்டங்களையும் பாதித்துள்ளன. கல்லூரி செல்லும் வயதில் இருப்பவர்களில் கிட்டத்தட்ட பாதிப்பேர் உயர்கல்வி நிலையங்களில் படிப்பதாக பெருமைப்பட்ட எடப்பாடி அரசு, பள்ளிக்கல்வியை தனியார் கொள்ளைக்கு தாரை வார்த்தது. நீட் தேர்வை உறுதிபட எதிர்க்க மறுத்தது. கல்விப்புல அதிகாரங்களை மைய அரசு அபகரித்ததை எதிர்க்க மறுத்தது. கல்வியும் மக்களுக்கான மருத்துவமும் வணிகச் சரக்கல்ல. அனைத்து மக்களுக்கும் அவை இரண்டும் இலவசமாக வழங்கப்பட வேண்டும்.

## தமிழ்நாட்டின் நிதி நெருக்கடி

தமிழ்நாடு அரசு கடும் நிதி நெருக்கடியில் உள்ளது. இதற்கு முக்கிய காரணம் ஒன்றிய அரசின் வரி மற்றும் வரவு செலவு கொள்கைகள். பணமதிப்பிழப்பு நடவடிக்கை மாநிலங்களின் வரி வருமானத்தை வீழ்ச்சி அடைய செய்தது. ஜிஎஸ்டி, மாநிலங்களின் வரி போடும் அதிகாரத்தையே கிட்டத்தட்ட முற்றிலும் பறித்து மாநில அரசின் நிதிஆதாரங்களை மேலும் சுருக்கியது. மீண்டும், மீண்டும் மாநில அரசுகளை கலந்துகொள்ளாமல் கார்ப்பரேட் கம்பெனிகளுக்கும் பெரும் செல்வந்தர்களுக்கும் ஒன்றிய அரசு அளித்துவரும் வரி சலுகைகள் மாநில-ஒன்றிய வரிப்பகிர்வு ஏற்பாட்டின் கீழ் மாநிலங்களுக்கு வரவேண்டிய வரிவருமானத்தை குறைத்துவிடுகின்றது. ஒன்றிய அரசின் கெடுபிடியால் அதிக வட்டிக்கு கடன் வாங்கி கொரோனா

கால செலவுகளை மாநில அரசு சமாளிக்க வேண்டியிருந்தது. மாநிலத்திற்கு ஒன்றிய அரசு தர வேண்டிய பல ஆயிரம் கோடி ரூபாய்கள் வரவில்லை. இவற்றோடு அஇஅதிமுக அரசும் தாராளமய கொள்கைகளை பின்பற்றியதால் அதன்பங்கிற்கு பெருமுதலாளிகளின் வளர்ச்சிக்கு ஊக்கமளித்தது. இதில் பெரும் ஊழலும் நிகழ்ந்தது. ஒன்றிய அரசின் நிதி மற்றும் அதிகாரம் சார்ந்த அடாவடி செயல்பாடுகளை எதிர்க்க பிற மாநிலங்களுடன் இணைந்தோ, தானாகவோ போராட மாநில அஇஅதிமுக அரசு மறுத்தது. அஇஅதிமுக அரசு தனது ஆட்சிக்காலத்தில் ஊழலை நிறுவனமயப்படுத்தி விட்டது.

## தேர்தல் சீர்திருத்தம்

ஊழல் முறைகேடுகளினால் குவிக்கப்பட்ட நிதி தேர்தல் நேரத்தில் வாக்குக்களை பெற முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது உள்ள தேர்தல் முறை இதற்கு இடமளிக்கிறது. இதை மாற்றிட,முன்பு ஒன்றிய அரசால் தோழர்.இந்திரஜித்குப்தா தலைமையில் அமைக்கப்பட்ட தேர்தல் சீர்திருத்தக்குழு அளித்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். மேலும், விகிதாச்சாரப் பிரதிநிதித்துவத் தன்மை கொண்டதாக தேர்தல் முறையை மாற்றியமைக்க தொடர் இயக்கம் நடத்த வேண்டும்.

## பாஜக அஇஅதிமுக உறவு

ஆர்எஸ்எஸ் அமைப்பும் அதன் துணை அமைப்புகளும் பல நகர்வுகளை சமூக தளத்தில் நடத்துகின்றன. இவற்றின் ஒரு முக்கிய நோக்கம் - அரசியல் அரங்கில் இவை பாஜகவுக்கு ஆதரவு வாக்குகளாக மாற வேண்டும் என்பதாகும். தமிழ் நாட்டின் அரசியல் அரங்கில் பாஜக ஒரு பெரிய தாக்கத்தை உருவாக்க முடியவில்லை. அதன் தேர்தல் பலம் என்பது கன்னியாகுமரி மாவட்டத்திலும், கோவை, திருப்பூர் மாவட்டங்களிலும் விரல்விட்டு எண்ணக்கூடிய சட்டமன்றத் தொகுதிகளில் மட்டுமே உள்ளது. அங்கும் கூட திராவிட

கட்சிகளின் ஆதரவு இல்லாமல் வெல்வது சாத்தியமல்ல. பெரும்பான்மையான தொகுதிகளில் நோட்டாவைவிட குறைவான வாக்குகளையே பாஜக பெறுகிறது.

எனினும், தமிழ் நாட்டில் பல கட்சிகள் பாஜகவுடன் அரசியல் உறவு வைத்துள்ளன. பாஜகவுடன் குறுகிய காலத்துக்கோ அல்லது நீண்ட காலத்துக்கோ அரசியல் பயணம் செய்துள்ளன. பாஜகவை தமது அரசியல் ஆதாயங்களுக்காக பயன்படுத்தலாம் என இந்த கட்சிகள் எண்ணுகின்றன. ஆனால், உண்மையில் இந்த கட்சிகளை பாஜக காலப்போக்கில் கபளீகரம் செய்துவிடும் என்பதுதான் அரசியல் அனுபவம். திரிணாமூல் காங்கிரஸ், ஐக்கிய ஜனதா தளம், மதச்சார்பற்ற ஜனதா தளம் என பல கட்சிகளின் அனுபவம் இதற்கு உதாரணமாகும். சில மாநிலங்களில் காங்கிரசையும் பாஜக சிதைத்துள்ளது.

தமிழ்நாட்டில் தனது சூழ்ச்சிக்கு ஜெயலலிதா இல்லாத அஇஅதிமுக மிகவும் பயன்படும் என பாஜக கணக்கு போடுகிறது. அஇஅதிமுகவின் ஊழல்கள் பற்றிய விவரங்கள் அதன் கையில் உள்ளதால், அஇஅதிமுகவை தான் இழுத்த இழுப்புக்கு பயன்படுத்துவது என்பது எளிதான ஒரு காரியமாக பாஜகவுக்கு உள்ளது. மாநில நலன்களை பலியிட அஇஅதிமுக துணிந்தது. உதய் மின் திட்டம், நீட் தேர்வு பிரச்சினை, 69 சதவிகிதம் இட ஒதுக்கீடு, சேலம்-சென்னை எட்டு வழிச்சாலை என இதற்குப் பல உதாரணங்களை குறிப்பிட முடியும். சமூக தளத்தில் பாஜகவின் இந்துத்துவா நடவடிக்கைகளை தடுக்க அஇஅதிமுக முன்வரவில்லை. ஆண்டாள் பற்றிய வைரமுத்துவின் கருத்துக்கு உருவான எதிர்வினை, கருப்பர் கூட்டம் கைது, வேல்யாத்திரைக்கு எதிராக கைது நாடகம் என பல உதாரணங்களை கூற முடியும். பள்ளிப் பாடங்களில் ஆர்எஸ்எஸ் குறித்து கூறப்பட்ட உண்மையான கருத்துகளைக் கூட திரும்பப் பெறுவதற்கு தமிழக அரசாங்கம் துணிந்தது. இந்தியக் கம்யூனிஸ்ட கட்சியின் அலுவலகத்தையும், தோழர்.ஆர்.நல்லகண்ணு அவர்களையும் அவதூறு செய்த சங்பரிவார் அமைப்பை சேர்ந்தவர்கள் மீது புகார் கொடுத்தும் நடவடிக்கை இல்லை.

இவ்வளவு பெரிய சரணாகதிக்கு பின்னரும் பிரதிபலனாக தமிழ்நாடு ஒன்றிய அரசாங்கத்தால் நிதி ஒதுக்கீடு அல்லது தொழில் திட்டங்களால் பலன் அடைந்ததா,எனில் இல்லை.

சமீபத்தில் அஇஅதிமுக எடுத்த மிக மோசமான பாஜக ஆதரவு நிலை என்பது சிஏஏ, என்பிஆர், என்.ஆர்.சி மற்றும் வேளாண் சட்டங்கள் குறித்தது ஆகும். அஇஅதிமுக எதிர்த்து வாக்களித்திருந்தால் இந்த சட்டங்கள் மாநிலங்களைவையில் தோற்றுப் போயிருக்கும். ஆனால், இந்த சட்டங்களை ஆதரித்ததன் மூலம் அஇஅதிமுக சிறுபான்மை மக்களுக்கும், விவசாயிகளுக்கும் மிகப்பெரிய துரோகம் இழைத்தது.

தனது பாஜக ஆதரவு நிலைபாடு தமிழ் சமூகத்தில் இந்துத்துவா கருத்துகள் ஊடுருவ பயன்படுகின்றன என்பதை உணர அஇஅதிமுக தயாராக இல்லை. தமது அரசியல் ஆதாயமும் ஊழல் செய்து சேகரித்த செல்வத்தை பாதுகாப்பதும்தான் உடனடி தேவை என அஇஅதிமுக தலைமை எண்ணுகிறது. எனவே, பாஜக அஇஅதிமுக கூட்டணியை கடந்த சட்டமன்ற தேர்தலில் தோற்கடித்தது மிக மிக சரியானதாகும். அந்த வகையில் தமிழக சட்டமன்றத் தேர்தல் வெறும் தேர்தல் சார்ந்த அரசியல் அல்ல! பாசிசத் தன்மை கொண்ட எதேச்சதிகார சக்திகளின் முன்னேற்றத்தை தடுக்க வேண்டிய தேவையாக இருந்த மிக முக்கிய தேர்தல். தமிழ்நாட்டு மக்கள் இக்கடமையை மிக சரியாகச் செய்து அஇஅதிமுக, பாஜக கூட்டணியை தோற்கடித்தனர். திமுக கூட்டணி பெரும் வெற்றி பெற்றது. எனினும், தேர்தலுக்கு அப்பாலும் மக்களோடு மக்களாக இரண்டறக் கலந்து பாசிச எதிர்ப்பு போராட்டத்தை நடத்த வேண்டிய சூழல் உள்ளது என்பதையும் கவனத்தில் நிறுத்துவது அவசியம் ஆகும்.

## முதன்மை எதிரி -பாஜக, ஆர்எஸ்எஸ்

தமிழ்நாட்டில் இந்துத்துவ சக்திகள் காலூன்ற துடியாய் துடிக்கின்றன. இதுவரை அவர்களால் நினைத்த அளவு வெற்றிபெற இயலவில்லை. நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் தமிழகத்தில் 4 சட்டமன்ற உறுப்பினர்களை

அவர்கள் பெற்றிருக்கிறார்கள். தமிழகத்தில் என்றுமே இந்த சக்திகள் வலுப்பெற முடியாது என நினைத்தால், அது தவறான மதிப்பீடாகவே அமையும். கட்சியின் தேர்தல் அறிக்கையில் பாஜகவை பற்றிய ஒரு மதிப்பீட்டை நம் கட்சி மிகத் தெளிவாகவே வெளியிட்டுள்ளது "அவர்கள் (பாஜகவினர்) ஒரு தொகுதியில் கால் பதித்தாலும் தமிழ்நாட்டின் தனித்துவப் பண்புகள் எல்லாவற்றையும் குறிவைத்து அழிப்பார்கள். சாதி, சாதி உட்பிரிவு, மதம் என கையில் கிடைத்ததையெல்லாம் எண்ணெய் ஊற்றி தீயிட்டு கலவரங்களை செய்தே அரசியல் இலாபம் தேடுவது பாரதிய ஜனதாவின் அரசியலாகும்".

இந்துத்துவ சக்திகள் தொடர்ந்து பகீரத முயற்சிகளை செய்து வருகின்றனர் என்பதை நாம் உதாசீனம் செய்யக் கூடாது. தமிழ் நாட்டின் தனித்துவ சமூக கூறுகளை வலுப்படுத்தும் அதே சமயத்தில் நாம் விழிப்புணர்வுடன் இருப்பது மிக அவசியம் ஆகும். மக்களையும் தொடர்ந்து விழிப்பூட்டுவதும் முக்கியத்துவம் பெறுகிறது.

ஆர்எஸ்எஸ் முன்னிறுத்தும் இந்துத்துவா கொள்கைகள் குறித்து நாம் விவாதிக்கும் பொழுது இதனுடன் தொடர்புடைய இரண்டு முக்கிய அம்சங்களை கவனத்தில் கொள்வது அவசியம். ஒன்று, தற்போதைய சூழலில் இந்துத்துவா கொள்கைகளும் நாசகர நவீன தாராளமய பொருளாதார கொள்கைகளும் ஒன்று சேர்ந்து ஒரே திசையில் பயணிக்கின்றன. ஒன்றை தவிர்த்துவிட்டு இன்னொன்றை மட்டுமே எதிர்ப்பது என்பது நிரந்தர பலன் தராது. இந்த இரட்டை அபாயங்களையும் ஒருசேர எதிர்ப்பது மிக மிக அவசியம்.

இரண்டாவது அம்சம், சிறுபான்மை மதவாதம் குறித்தது ஆகும். முதன்மை ஆபத்து என்பது ஆர்எஸ்எஸ் முன்னிறுத்தும் பெரும்பான்மை மதவாதம்தான். எனினும், சிறுபான்மை மதவாதத்தின் ஆபத்தையும் குறைத்து மதிப்பிடக்கூடாது. பெரும்பான்மை மதவாதம், சிறுபான்மை மதவாதம் தோன்றக் காரணியாக அமைந்துள்ளது. இரண்டு

மதவாதங்களும் ஒன்றுக்கொன்று வளர்வதற்கு தங்கள் நடவடிக்கைகளால் உதவிக் கொள்கின்றன என்பது நடைமுறை அனுபவமாகும்.

## தமிழ்நாட்டின் தனித்துவம்

தமிழ்நாட்டில் ஏன் இந்துத்வ சக்திகள் காலூன்ற முடியவில்லை? தமிழக வரலாற்றைப் பின்னோக்கி பார்த்தால் சில காரணங்களை வகைப்படுத்த முடியும்.

1. ஆரிய நாகரிகம் இங்கு வந்தடைவதற்கு முன்பே ஒரு சிறந்த நாகரிகம் இங்கே இருந்தது என்பதை கீழடி, ஆதிச்ச நல்லூர், கொற்கை, கொடுமணல், பொற்பனக்கோட்டை அகழாய்வுகள் நிரூபிக்கின்றன. சங்க இலக்கியங்களும், தொல்காப்பியமும் சான்றுகளாய் நிற்கின்றன

2. வர்ணாசிரமத்துக்கு எதிரான ஒரு வலுவான தொடர்ச்சியான போராட்டம் தமிழ்நாட்டில் இடைவிடாது பல நூற்றாண்டுகளாக நடந்துள்ளது.

3. வட இந்தியாவுடன் ஒப்பிடும் பொழுது இந்து-முஸ்லீம் அல்லது இந்து-கிறித்துவ முரண்பாடுகள் தமிழ்நாட்டில் மிகக் குறைவு.

தமிழ்நாட்டில் ஆசீவகம் உட்பட சமணமும், பவுத்தமும் மக்களிடையே பலநூற்றாண்டு காலம் வலுவான ஆதரவை பெற்றிருந்தன. வர்ணாசிரமம் தாமதமாகவே தமிழ்நாடு வந்தடைந்தது. இங்கு வலுவாக நிலவிய ஆசீவகம், பவுத்தம், சமணம் அவ்வளவு எளிதாக வர்ணாசிரமத்துக்கு இடம் கொடுக்கவில்லை. எதிர்சமர் புரிந்தன. குண்டலகேசி, நீலகேசி, ஒரு பிரிவு சித்தர்களின் படைப்புகள் இதற்கு சாட்சி. வர்ணாசிரமம் வர்ண பேதத்தை முன்வைத்த பொழுது எதிர்வினையாக “பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” என திருக்குறள் கூறியது. உயர் வர்ணங்களுக்கு ஏனைய வர்ணங்கள் அடிபணிய வேண்டும் என்ற பொழுது “இறைச்சி தோல் எலும்பினுள் இலக்கம் இட்டு இருக்குதோ?” “பறைச்சி போகம் வேறெதோ பனத்திபோகம் வேறெதோ பகுத்துப்பாரும் உம் உள்ளே” என்றும், “வேண்டாத மனையினில் உறவு

கொள்வோம்" என சித்தர்கள் எதிர்க்குரல் கொடுத்தனர். பவுத்தத்தை ஆதரித்த களப்பிரர்கள் பிராமணியத்தை ஒடுக்க முற்பட்டனர். முந்தைய ஆட்சியில் பிராமணர்களுக்கு தரப்பட்ட நிலங்களை திருப்பி வாங்கும் அளவுக்கு களப்பிரர்கள் தீவிரமாக செயல்பட்டனர். இங்கு ஊடுருவ வேண்டும் எனில் சமஸ்கிருதம் பயன்படாது; தமிழை கையில் எடுக்க வேண்டும் என உணர்ந்தவர்கள் தமிழை ஆயுதமாக கொண்டு தாக்குதல் தொடுத்தனர். பவுத்தமும், சமணமும் வேட்டையாடப்பட்டன. எனவே, அவை பின்வாங்கின. வர்ணாசிரமம் தமிழ்நாட்டில் காலூன்றியது.

இதற்கு எதிரான எதிர்வினையும் உருவான வண்ணம் இருந்தன. வள்ளலார் ஆன்மீக கோணத்திருந்து எதிர்வினையாற்றினார். "சாதியும், மதமும், சமயமும் வேண்டேன். சாத்திரக்குப்பையும் வேண்டேன்" என்றும் குரல் கொடுத்தார். வர்ணாசிரமத்தின் நீட்சியாக சாதியம் உருவாகி ஒரு பிரிவினரை தள்ளிவைத்த பொழுது அய்யா வைகுண்டர் சமத்துவ கிணறுகளை நிறுவினார். ஆங்கிலேயர்களின் வருகைக்கு பின்னர் தமிழகத்தில் கிறித்துவம் காலடி எடுத்துவைத்தது. முதலில் உயர்வகுப்பினரிடையே பரவ முயன்று தோல்வி கண்டது. தனது அணுகுமுறையை மாற்றி ஒடுக்கப்பட்டவர்களை அணுகியபொழுது ஒரு பிரிவு மக்கள் கிறித்துவத்தை அரவணைத்தனர். பவுத்தம், சமணம் காலகட்டத்தில் கிடைத்த கல்வி, பின்னர் வர்ணாசிரமவாதிகளால் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மருத்துவமும், கல்வியும் மறுக்கப்பட்டன. கிறித்துவத்தின் முயற்சியால் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மீண்டும் கல்வி கிடைத்தது. இது கிறித்துவத்தின் வளர்ச்சிக்கும் வழிகோலியது.

வர்ணாசிரமத்துக்கு எதிரான குரல்கள் தொடர்ந்து கொண்டேயிருந்தன. தமிழ்நாட்டில் அயோத்திதாசரும், ரெட்டை மலை சீனிவாசனும் அடக்கப்பட்டவர்களின் குரலாக முன்வந்தனர். இந்த பரிணாமத்தின் ஒரு முக்கிய கட்டமாக தந்தை பெரியார் களத்துக்கு வந்தார். பெரியாரின் செயல்பாடுகள் தமிழ்ச் சமூகத்தில் ஒரு ஆழமான தாக்கத்தை உருவாக்கியது. இந்தியாவின் விடுதலை குறித்த பெரியாரின்

கருத்துகள் விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவை அல்ல என்றாலும், அவரின் தாக்கம் இன்றளவும் மிகப்பெரிய பங்கை ஆற்றிக்கொண்டுள்ளது என்பதை மறுக்க இயலாது. சங்பரிவாரத்துக்கு எதிராக ஒரு வலுவான கேடயமாக பெரியார் இன்றளவும் திகழ்கிறார்.இதே காலகட்டத்தில் தோழர்கள் சிந்தனைச்சிற்பி சிங்காரவேலர், பேராசான் ஜீவா, போராளி தோழர் சீனிவாசராவ் போன்றவர்களால் வழிகாட்டப்பட்டு தஞ்சை தரணி உட்பட பல பகுதிகளில் ஒடுக்கப்பட்ட மக்களை சமூக கொடுமை, பொருளாதார சுரண்டல் இரண்டுக்கும் எதிராகவும் பொதுவுடைமை இயக்கம் அணிதிரட்டியது. இந்த சீர்திருத்த மறுமலர்ச்சி இயக்கங்கள் தமிழ் நாட்டில் சமூக, அரசியல் வாழ்வில் இன்றுவரை ஒரு மகத்தான தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன.

## தமிழ் நாட்டில் மத ஒற்றுமை

தமிழ்நாட்டில் ஒட்டு மொத்தமாக சுல்தான்கள் அல்லது முகலாயர்களின் ஆட்சியின் கீழ் இருந்திருக்கவில்லை. சுமார் 50 முதல் 60 ஆண்டுகள் பாண்டிய தேசத்தை சில சுல்தான்கள் ஆண்டனர். பின்னர் அவர்கள் விஜயநகர மன்னர்களால் தோற்கடிக்கப்பட்டனர். முகலாய பேரரசின் ஒரு பகுதியாக கூட தமிழ்நாடு இருக்கவில்லை. வடபகுதி அளவுக்கு இஸ்லாம் தமிழ் நாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.

வட இந்தியாவில் நடந்தது போல வழிபாட்டுத்தலங்கள் மீது தாக்குதல்கள் தமிழ்நாட்டில் நடக்கவில்லை. பாண்டிய மன்னரின் குடும்பத்தில் உருவான முரண்பாடுகள் காரணமாக அவர்களின் ஒரு பிரிவினர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க மாலிக் காபூரின் படைகள் ஆந்திராவிலிருந்து தமிழ்நாட்டிற்கு வந்தன. வழியில் ஓரிரு சிறிய கோவில்கள் மாலிக்கபூரின் படைகளால் தாக்கப்பட்டன என்ற விமர்சனம் இருந்தாலும்,மதுரை மீனாட்சி அம்மன் கோவிலோ அல்லது இராமநாதபுரம், இராமேஸ்வரக்கோவிலோ தாக்கப்படவில்லை.

மத்திய காலத்தில் வழிபாட்டுத்தலங்கள் தாக்கப்பட்டது குறித்து சங்பரிவாரம் வரலாற்றை திசைதிருப்பி பிரச்சாரம் செய்கிறது. வழிபாட்டுத் தலங்கள் தாக்கப்பட்டது உண்மையே! எனினும், முஸ்லீம் மன்னர்களால் வழிபாட்டுத்தலங்கள் பாதுகாக்கப்பட்ட உதாரணங்களும் ஏராளம்! இந்து மன்னர்களும் இந்து கோவில்களை அழித்துள்ளனர், பொருள்களையும் கொள்ளையடித்தனர் என்பதற்கும் ஏராளமான வரலாற்று ஆதாரங்கள் உண்டு. அதே சமயத்தில் மசூதிகளை கட்டிக்கொடுத்த இந்து மன்னர்களும் உண்டு. சைவமும் வைணவமும் மறுமலர்ச்சி அடைந்த பொழுது ஏராளமான சமண, பவுத்த கோவில்கள் தாக்குதலுக்கு உள்ளாயின. சைவ கோயில்களாக மாற்றப்பட்ட சம்பவங்களும் நடந்துள்ளன. தமிழ்நாட்டில் இதற்கு பல குறிப்பிடத்தக்க ஆதாரங்கள் உண்டு. இவை அனைத்தையும் விருப்பு வெறுப்பின்றி ஆய்வதற்கு மாறாக முஸ்லீம்களை இந்துக்களின் எதிரிகளாக கட்டமைக்க வரலாற்றின் ஒரு பகுதியை மட்டுமே சங்பரிவாரம் முன்நிறுத்துகிறது.

1857 கிளர்ச்சி இந்தியாவின் முதல் விடுதலைப்போர் என வகைப்படுத்தப்படுகிறது. ஆனால், அதற்கு முன்பே சில முக்கிய காலனியாதிக்க எதிர்ப்புக் கிளர்ச்சிகள் தமிழ் நாட்டில் நிகழ்ந்தன. பூலித் தேவன், வேலு நாச்சியார், மருது சகோதரர்கள், தீரன் சின்னமலை, வீரபாண்டிய கட்டபொம்மன், அழகுமுத்துக்கோன், சுந்தரலிங்கனார், தீரன் சின்னமலையின் மெய்காவலர் பொல்லான், ஒண்டிவீரர் ஆகியோர் ஆங்கிலேயருக்கு எதிராக நடத்திய போர்களும், வேலூர் கிளர்ச்சியும் தமிழ்நாட்டில் முக்கியமான பிரிட்டிஷ் எதிர்ப்பு போராட்டங்கள் ஆகும். இவற்றின் பல்வேறு தகவல்களை ஆய்வு செய்தால் இந்த கிளர்ச்சிகளில் இந்து-முஸ்லீம் ஒற்றுமை வலுவாக இருந்தது புலனாகும். வேலு நாச்சியாருக்கு ஹைதர் அலியும், தீரன்சின்னமலைக்கு திப்பு சுல்தானும் உதவியதாக வரலாற்றுப் பதிவுகள் உள்ளன. மருது சகோதரர்களின்,ஆங்கிலேயருக்கு எதிரான “நாவலந்தீவு பிரகடனம்“ என்று அழைக்கப்படும் “ஸ்ரீரங்கம் பிரகடனம்” இந்து முஸ்லீம் ஒற்றுமையை வெளிப்படுத்துகிறது. சின்ன மருதுவின் தோல்விக்கு பின்னர் அவரின் ஆயிரக்கணக்கான

படை வீரர்கள் தூக்கிலிடப்பட்டனர். மேலும் பலர் மருதுவின் புதல்வர்கள் உட்பட பர்மாவுக்கு நாடு கடத்தப்பட்டனர். அதில் முஸ்லீம்களும் அடக்கம். வேலூர் கிளர்ச்சி திப்புவின் புதல்வர்கள் தலைமையில் இந்துக்கள்-முஸ்லீம்கள் அனைவராலும் சேர்ந்து நடத்தப்பட்டது.

பிரிட்டிஷாருக்கு எதிராக தமிழ்நாட்டில் நடந்த கிளர்ச்சிகளில் இந்துக்களும், முஸ்லீம்களும் இணைந்தே பங்கேற்றனர். வடக்கே இருந்த அளவுக்கு தமிழ்நாடு உட்பட தென்னகத்தில் பாகிஸ்தான் ஆதரவு உணர்வு இருக்கவில்லை. பாகிஸ்தான் கோரிக்கைக்கு எதிராக முஸ்லீம்களின் மாநாடுகள் சென்னையிலும் பின்னர் கும்பகோணத்திலும் நடந்தது. பாகிஸ்தான் கோரிக்கையை எதிர்த்தவர்கள் முஸ்லீம் லீகிலிருந்து வெளியேறினர்.

இந்திய விடுதலை,தேசப்பிரிவினையுடன் இணைந்து நிகழ்ந்தது. தேசப்பிரிவினையின் பொழுது ஒரு கோடிக்கும் அதிகமானவர்கள் இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்கும் அங்கிருந்து இங்கேயும் வந்தனர். இதன் விளைவாக வடபகுதிகளில் மதக்கலவரங்கள் கொழுந்துவிட்டு எரிந்தன. தேசத் தந்தை காந்தியடிகள் நவகாளியில் காலவரையறையற்ற உண்ணாவிரதம் இருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அந்த சூழலில் தமிழ்நாடு பெரிய அளவில் கலவரங்களை சந்திக்கவில்லை. ஆம்பூரிலும், இராமநாதபுரத்திலும் கலவரங்கள் தோன்றின. அன்றைய முதல்வர் பிரகாசம் அவர்கள் விரைவாக செயல்பட்டு கலவரங்களை அடக்கினார். ஒப்பீட்டளவில் தமிழ்நாடு அமைதியாக இருந்தது என கூறுவது மிகை அல்ல.

இந்த அரசியல் சமூக நீரோட்டங்களின் ஒட்டு மொத்த சூழல் தமிழ்நாட்டிற்கு தனித்துவத்தை உருவாக்கியது. ஒரு புறத்தில் வர்ணாசிரமத்துக்கு எதிராக போராட்டங்கள் பல வடிவங்களில் அரங்கேறின. மறுபுறத்தில் இந்து-முஸ்லீம் முரண்பாடுகள் ஒரு வரையறைக்குள் இருந்தது; ஒற்றுமை பாதுகாக்கப்பட்டது. பாசிச சக்திகளுக்கு எப்பொழுதுமே ஒரு கற்பனை எதிரியை கட்டமைக்கும் தேவை உள்ளது. அப்பொழுதுதான் தனது பெரும்பான்மை இனத்தை

அணிதிரட்ட இயலும். இந்தியாவின் பல பகுதிகளில் முஸ்லீம்களையும் சில பகுதிகளில் கிறித்துவர்களையும் ஆர்எஸ்எஸ் அவ்வாறு இந்துக்களின் எதிரிகளாக கட்டமைப்பதில் வென்றுள்ளது. ஆனால், தமிழ்நாட்டில் (ஒரு சில மாவட்டங்கள் தவிர) அதில் இதுவரை பெரிய அளவுக்கு வெல்ல முடியவில்லை. இந்த இரண்டு காரணங்களாலும் ஆர்எஸ்எஸ் பெரிய அளவுக்கு தமிழ்நாட்டில் காலூன்ற முடியவில்லை.

தமிழ் நாட்டில் இயற்கையாக வளர இயலாத சங்பரிவாரம் வேறு சில உத்திகளை கையாள்கிறது. அகில இந்திய அளவில் தனக்கு உருவாகியுள்ள அதிகார பலம், பண பலம் ஆகியவற்றைப் பயன்படுத்தி தமிழ்நாட்டில் தனது வளர்ச்சியை திணிக்க முனைகிறது.

## தமிழ்நாட்டில் ஆர்எஸ்எஸ்சின் செயல்பாடுகள்

ஆர்எஸ்எஸ் தமிழ்நாட்டை இரண்டு பிரிவுகளாக பிரித்துள்ளது. அவை தென் தமிழ்நாடு, வட தமிழ்நாடு ஆகும். கடந்த சில வருடங்களில் ஆர்எஸ்எஸ் நடத்தும் ஷாகாக்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளன. இந்த ஷாகாக்களில் 10 வயது முதல் முதியவர்கள் வரை பங்கேற்கின்றனர். இங்கே அளிக்கப்படும் உடற்பயிற்சிகளும், தற்காப்பு கலைகளும், போதனைகளும், இளைஞர்களை எளிதில் ஈர்ப்பதாக உள்ளன. ஆனால், ஒவ்வொரு ஷாகாக் கூட்டத்திலும் தனது விஷ கொள்கைகளை, பங்கேற்பாளர்களின் சிந்தனையில் செலுத்தப்படுகிறது என்பதுதான் உண்மை. தனக்கு என்ன பயிற்றுவிக்கப்படுகிறது என்பதை உணரும் முன்பே, பங்கேற்பாளர் இந்துத்துவாவின் ஆதரவாளராகவும், பின்னர் ஊழியராகவும் மாறிவிடுகிறார். முஸ்லீம், கிறித்துவ, கம்யூனிச எதிர்ப்பு, திராவிட எதிர்ப்பு, பெரியார் வெறுப்பு ஆகியன வலுவாக திணிக்கப்படுகின்றன.

சாதிய வேறுபாடுகள் முக்கியம் அல்ல! மத வேறுபாடுகள்தான் முக்கியமானவை என்பதும் இந்தியா இந்துக்களுக்கு மட்டுமே சொந்தமான தேசம் என்பதும் வலுவாக ஊட்டப்படுகிறது. "நாம் தமிழ் பிராமணராக

இருக்கலாம்; அல்லது தமிழ் நாடாராக இருக்கலாம். ஆனால் நாம் அனைவரும் இந்துக்கள் என்பதுதான் முக்கியம்" என்பது ஷாகாக்களில் போதிக்கப்படும் முக்கிய கருத்து. வறுமை, வேலையின்மை, விலைவாசி உயர்வு ஆகியவை உருவாக்கும் துன்பங்களைவிட நமது மதம் ஆபத்தில் உள்ளது என்பதும், அதனை நீக்க இயங்குவதும்தான் முக்கியமானது என்பதும் போதிக்கப்படுகிறது.

460 ஷாகாக்கள், அதாவது 20 சதவிகிதம் மேற்கு மாவட்டங்களான கோவை, திருப்பூர், நீலகிரியில் நடைபெறுகின்றன. அதே போல கன்னியாகுமரி மற்றும் அண்டை மாவட்டங்களிலும் அதிக அளவிலான ஷாகாக்கள் நடக்கின்றன. மீனாட்சிபுரம் மதமாற்றங்கள் குறித்த தவறான பிரச்சாரம் ஆர்எஸ்எஸ் காலூன்ற ஒரு வாய்ப்பை அளித்தது எனில், அடுத்து 1982இல் நடந்த மண்டைகாடு கலவரங்களுக்கு (இந்துக்களுக்கும் கிறித்துவர்களுக்கும் இடையே உருவாக்கப்பட்ட மத மோதல்கள்) பின்னர் இந்துத்துவா சக்திகள் தென் தமிழகத்தில் மேலும் தம்மை வலுப்படுத்தி கொண்டன. கன்னியாகுமரி மாவட்டத்தில் கிறித்துவ மக்களின் எண்ணிக்கை அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. சாதி, மத மோதல்களை உருவாக்குவதன் மூலம் தன்னை பலப்படுத்திக் கொள்வதே ஆர்எஸ்எஸ்சின் தந்திரமாகும்.

கோவையில் ஆர்எஸ்எஸ் மற்றும் இஸ்லாமிய மதவாத அமைப்பான அல் உமா இடையே தொடர்ந்து முரண்பாடுகள் இருந்து வந்தன. போக்குவரத்து காவலர் ஒருவர் கொல்லப்பட்டதை தொடர்ந்து 1997ஆம் ஆண்டு கலவரங்களில் 18 முஸ்லீம்கள் இந்துத்துவா சக்திகளால் கொல்லப்பட்டனர். இதற்கு பதிலடி கொடுக்கவும் தனது மேலாதிக்கத்தை நிலைநாட்டவும் அல் உமா சார்பாக குண்டு வெடிப்புகள் நிகழ்ந்தன. 58 பேர் கொல்லப்பட்டனர். இது அல் உமாவின் மேலாதிக்கத்துக்கு உதவவில்லை; மாறாக இந்துத்துவா சக்திகளின் வலுவான தளங்கள் உருவாக காரணமாக அமைந்தன. மேற்கு மாவட்டங்கள் முழுவதிலும் இஸ்லாமிய மக்கள் திடீரென அனைவரின் வெறுப்புகளுக்கு

ஆளாயினர். கோவையில் சிதைந்து போன மத ஒற்றுமையை ஓரளவுக்காவது மீட்டெடுக்க, மதச்சார்பின்மை சக்திகளுக்கு நீண்ட நாட்கள் தேவைப்பட்டன. எனினும், இன்றளவும் மேற்கு மாவட்டங்களில் இந்துத்துவா சக்திகள் வலுவாக உள்ளன. அதன் பிரதிபலிப்புதான் அங்கு அதிகமாக நடக்கும் ஷாகாக்கள்.

## இந்துத்துவ சக்திகளின் கல்வி நிலையங்களும் தொழிற்சங்கமும்

இந்துத்துவா சக்திகள் கல்வி நிலையங்கள் நடத்துவதும் அதன் மூலம் மாணவர்களை இளம் வயதிலேயே மூளைச்சலவை செய்வதும் பரவலாக நடக்கூடிய ஒன்று. இந்தியா முழுதும் சுமார் 12,000 பள்ளிகள் "வித்யா பாரதி" எனும் பெயரில் இயக்கப்படுகின்றன. இவற்றில் சுமார் 30 இலட்சம் மாணவர்கள் பயில்கின்றனர். இந்த அமைப்பினர் தமிழகத்திலும் பள்ளிகளை நடத்துகின்றனர். அதன் விவரங்கள்:

| | | |
|---|---|---|
| தொடக்கநிலை பள்ளிகள் | - | 159 |
| நடுநிலை பள்ளிகள் | - | 32 |
| உயர்நிலைப் பள்ளிகள் | - | 39. |
| மேனிலைப் பள்ளிகள் | - | 47 |
| பயிலும் மாணவ, மாணவிகள் | - | 64,662. |

மேலும் "ஸன்ஸ்கார் மையங்கள்" என்ற பெயரிலும் 108 கல்வி நிலையங்கள் நடத்தப்படுகின்றன.

இந்துத்வ தலைவரும் முசோலினியை நேரில் சந்தித்து அந்தவழியில் இந்துக்களை ஆயுதபாணிகளாக ஆக்க வேண்டும் என கூறியவருமான மூஞ்சே தொடங்கிய "பாரதிய வித்யா பவன்" கல்வி நிலையங்களும் தமிழகத்தில் உள்ளன. சென்னை, கோவை, கொடைக்கானல் ஆகிய இடங்களில் இந்த பள்ளிகள் நடக்கின்றன. இந்த கல்வி நிலையங்களில்

அரசின் பாடத்திட்டங்களே பயிற்றுவிக்கப்படுவதாக வெளியில் கூறிக்கொண்டாலும், உள்ளுக்குள் இந்துத்துவா நச்சு கருத்துகள் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றன என்பதை கூறத் தேவை இல்லை.

சேவா பாரதி எனும் பெயரில் ஏராளமான "கல்வி உதவி நிலையங்களை" இந்துத்துவா சக்திகள் நடத்துகின்றன. ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு 9 மாவட்டங்களில் 115 டியூஷன் மையங்கள் இயங்கின. இன்று 20 மாவட்டங்களில் 1,000 மையங்கள் இயங்குகின்றன. பெரும்பாலும் வசதியற்ற இடைநிலை சாதிகள், தலித் மக்களிடையே இந்த மையங்கள் இயங்குகின்றன. இங்கு பாடங்கள் இலவசமாக கற்றுத்தரப்படுகின்றன. பாடங்களுக்கு முன்பு கோவில் சுத்தம் செய்தல், இறை வழிபாடு, தியானம் ஆகியவை முன்னெடுக்கப்படுகின்றன. ஆன்மீக அளவில் மனதை தயார்படுத்திவிட்டால், பின்னர் இந்துத்துவ கருத்துகளை உட்செலுத்துவது மிகவும் சுலபமாகிவிடுகிறது. இலவச சேவை என்பதால் பெற்றோர்கள் இந்துத்துவா பின்னணி குறித்து கவலைப்படுவது இல்லை.

ஆர்எஸ்எஸ்சின் மாணவர் அமைப்பான "அகில பாரத வித்யார்த்தி பரிஷத்' அமைப்பும் தன்னை வலுப்படுத்திக் கொள்ள முனைப்புடன் செயல்படுகிறது. கோவை, கன்னியாகுமரி, சிவகங்கை, சென்னை போன்ற இடங்களில் பள்ளி,கல்லூரிகளில் காலூன்ற முயற்சிகள் நடக்கின்றன. எனினும் குறிப்பிடத்தக்க வெற்றி பெற இயலவில்லை.

தமது கால்பதிப்புக்கு இந்துத்துவா சக்திகள் சார்ந்திருக்கும் இன்னொரு அமைப்பு "பாரதிய மஸ்தூர் சங்" எனும் தொழிற்சங்க அமைப்பு ஆகும். அநேகமாக நெய்வேலி, பிஎச்இஎல், இரயில்வே, போக்குவரத்து, மின்சாரம் போன்ற அனைத்து அணிதிரட்டப்பட்ட தொழில்களிலும் பிஎம்எஸ். இயங்குகிறது. பிஎச்இஎல் திருச்சி ஆலையில் மட்டும் தேர்தல் மூலம் அங்கீகரிக்கப்பட்ட 5 சங்கங்களில் ஒன்றாக உள்ளது. மற்ற இடங்களில் பெரிய தாக்கத்தை உருவாக்க முடியவில்லை. சமீப காலமாக முறைசாரா தொழில்களில் பிஎம்எஸ் அதிக கவனத்தை செலுத்துகிறது.

ஆட்டோ, கட்டிடம், தரைக்கடைகள் ஆகியவை சில உதாரணங்கள். ஆட்டோ மற்றும் தரைக்கடைகளில் முஸ்லீம் உழைப்பாளிகளின் எண்ணிக்கை அதிகம். சில முஸ்லீம் அமைப்புகளும் தொழிற்சங்கத்தை உருவாக்கியுள்ளன. கணிசமான முஸ்லீம் தொழிலாளர்களை தன்பக்கம் இந்த தொழிற்சங்கங்கள் ஈர்த்துள்ளன. இது கவலை தரும் அம்சமாகும். ஒரு புறம் இடதுசாரி, திராவிட, காங்கிரஸ் தொழிற்சங்கங்கள் பலவீனம் அடைகின்றன. மறுபுறத்தில் முஸ்லீம் தொழிலாளர்களை எதிரிகளாக கட்டமைத்து இந்து தொழிலாளர்களை ஈர்ப்பதற்கான வாய்ப்பையும் பிஎம்எஸ்சுக்கு இந்த சூழல் உருவாக்குகிறது. எனினும் மோடி அரசாங்கத்தின் தொழிலாளர் விரோத கொள்கைகள் காரணமாக பி.எம்.எஸ். எதிர்பார்த்த அளவு முன்னேற இயலவில்லை. ஆனால், அதன் ஒவ்வொரு உறுப்பினரும் இந்துத்துவா ஆதரவாளராக மாறும் ஆபத்து உள்ளது என்பதை மறுக்க இயலாது.

## இந்துத்துவாவின் தமிழ் முகமூடி

தமிழகத்தில் காலூன்ற தமிழ் முகமூடி தேவை என்பதை சங் பரிவாரத்தினர் உணர்ந்துள்ளனர். அதற்காக தமிழ், தமிழ்க் கடவுள் என பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். முருகன் தமிழ்க் கடவுள். தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில்தான் முருகன் கும்பிடப்படுகிறார். வடபகுதிகளில் அவ்வாறு இல்லை. இதன் காரணமாக முருகரை கைக் கொள்வது என சங் பரிவாரத்தினர் முடிவு செய்தனர். 2018ஆம் ஆண்டு வேல் சங்கம ரத யாத்திரையை நடத்தினர். அதன் நோக்கங்கள்:

“நாயன்மார்களும், ஆழ்வார்களும் வளர்த்த ஆன்மீகத் தமிழகத்தை அதன் வழியில் தொடரும் வகையிலும், பிரிவினைவாத பயங்கரவாத சக்திகளிடமிருந்து தமிழ்நாட்டை காக்கவும், சாதி, மதம், மொழி வேறுபாடுகள் கடந்து மக்கள் ஒற்றுமையுடன் வாழவும் இந்த வேல் சங்கம ரத யாத்திரையை தொடங்கியுள்ளோம்.” என கூறினர்.

இங்கு கவனிக்க வேண்டிய ஒன்று என்னவென்றால் இவர்கள் மீட்க முயல்வது “”நாயன்மார்களும், ஆழ்வார்களும் வளர்த்த ஆன்மீகத் தமிழ்”. தமிழுக்கு புதிய வடிவமாக “ஆன்மீக தமிழ்” என நாமகரணம் சூட்டுகின்றனர்

ஆழ்வார்களும் நாயன்மார்களும் தமிழை வளர்த்தனர். ஆனால், எதற்கு எதிராக என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆழ்வார்களும் நாயன்மார்களும் சமஸ்கிருத எதிர்ப்பு நிலையில் நின்று பக்தி இயக்கத்தை முன்னெடுத்தனர். சனாதன தர்மத்தின் சாதிய முறையை எதிர்த்த நாயன்மார்களும் ஆழ்வார்களும் உண்டு என்பதை சங்பரிவார் அமைப்புகள் மறைக்க முயல்கின்றனர். மேலும் தமிழ் வளர்ச்சிக்கு பங்களித்த அனைத்து போக்குகளையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

முற்போக்கு கருத்தை முன்வைத்த சித்தர்கள், சீவகசிந்தாமணி, வளையாபதி, நீலகேசி, பெருங்கதை, யசோதரகாவியம், நாககுமார காவியம், உதயணகுமார காவியம், சூளாமணி ஆகிய சமண காவியங்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி ஆகிய பவுத்த காவியங்கள், கனகாபிஷேக மாலை, சீறாப்புராணம், திருமணக் காட்சி, சின்னச் சீறா, முகைதீன் புராணம் ஆகிய இஸ்லாமிய இலக்கியங்கள் தேம்பாவணி,திருச்செல்வர் காவியம்,கிறிஸ்தாயனம்,திருவாக்குப் புராணம் ஆகிய கிறித்துவ இலக்கியங்கள் இவைகள் அனைத்தும் தான் தமிழை வளர்த்துள்ளன. மகாகவி பாரதியும், பாவேந்தர் பாரதிதாசனும் வளர்க்காத தமிழும் உண்டோ! புலவர் குழந்தை அவர்களால் இயற்றப்பட்ட இராவண காவியம் உட்பட திராவிட இயக்க எழுத்தாளர்களின் இலக்கியங்கள் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள், மற்றும் கலைஞர்கள் சங்கம், தாமரை, செம்மலர் இதழ்கள் உட்பட இடதுசாரி கலை இலக்கிய அமைப்புகள், இதழ்கள், இடதுசாரி எழுத்தாளர்கள், கலை இலக்கியவாதிகள் என அனைவரும் தமிழை வளர்ப்பதில் முன்னின்று உள்ளனர்

எனவே, சங்பரிவாரம் முன்வைக்கும் "ஆன்மீக தமிழ்" என்பது தமிழின் தொன்மை வரலாற்றின் ஒரு பகுதியை இருட்டடிப்பு செய்யும் உள்நோக்கம் கொண்டது. அதேவேளையில் ஆழ்வார்களும் நாயன்மார்களும் வளர்த்த தமிழை தங்களது ஆன்மீக தமிழ் என்ற கருத்தாக்கத்திற்கு பயன்படுத்த நினைக்கும் சங்பரிவார்கள் முயற்சியை முறியடிக்க வேண்டிய அவசியம் நமக்கு இருக்கிறது. பேராசான் ஜீவா அவர்கள் மகாகவி பாரதியை ஆன்மீகவாதியாக அடையாளப்படுத்த ராஜாஜியும், கல்கியும் எடுத்த முயற்சியை எப்படி முறியடித்தாரோ அதேபோன்ற முயற்சி நமக்கு தேவைப்படுகிறது.

பாஜகவின் வேல்சங்கமயாத்திரை மக்களிடம் பெரிய ஆதரவை பெறவில்லை. பாஜகவினரே கூட இதில் ஆர்வம் காட்டவில்லை. எனினும், 2020ஆம் ஆண்டு கருப்பர் கூட்டம் எனும் அமைப்பு கந்தர்சஷ்டி குறித்து கூறிய கருத்துகளை மையமாக வைத்து, மீண்டும் ஒரு வேல் யாத்திரையை பாஜக நடத்தியது. இதுவும் பெரிய ஆதரவை பெறவில்லை என்றாலும், ஒரு சிறிய தாக்கத்தை உருவாக்கியது என்பதை மறுக்க முடியாது. பாசிச சக்திகள் முன்வைக்கும் கருத்துகள், சொற்றொடர்கள் குறித்து மிகவும் விழிப்புணர்வுடன் இருப்பது அவசியம் எனும் படிப்பினையை இது முன்வைக்கிறது.

## வள்ளுவரை கைப்பற்றுதல்!

சங்பரிவாரத்தினரின் அடுத்த முயற்சி திருவள்ளுவரை சுவீகரிப்பது ஆகும். திருவள்ளுவருக்கு காவி வர்ணத்தை பூசினர். இறுதியாக சிபிஎஸ்ஈ பாடத்திட்டத்தில் குடுமியும் பூணுலும் தரித்துவிட்டனர். எனினும் அவர்கள் திருக்குறளை முன்வைப்பதில் ஒரு உள்நோக்கம் உள்ளது. அவர்களின் உண்மையான நோக்கம் கீதையை வலுவாக முன்னெடுப்பதுதான்! எனவேதான் ஆர்எஸ்எஸ் இன் விஜயபாரதம் "பகவத் கீதையும் திருக்குறளும் நமக்கு இரு கண்கள்" என கூறுகிறது. வர்ணாசிரமத்தையும்,

பெண்ணடிமைத்தனத்தையும் நியாயப்படுத்தும் கீதையும் "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" எனும் திருக்குறளும் எப்படி "இரு கண்களாக" இருக்க இயலும்?.

## தெய்வீகத் தமிழ்ச் சங்கம்

சமீபத்தில் சங்பரிவாரத்தினர் "தெய்வீகத் தமிழ்ச் சங்கம்" எனும் ஒரு அமைப்பை உருவாக்கியுள்ளனர். இதனை உருவாக்க வேண்டிய அவசியம் ஏன்?

"நாங்கள் சமீபத்தில் ஆர்எஸ்எஸ் அடையாளத்துடன் வீடு வீடாக சென்றோம். போதிய வரவேற்பு இல்லை. எனவே, "தெய்வீகத் தமிழ்ச் சங்கம்" அமைப்பை உருவாக்கியுள்ளோம்." என கூறுகிறார்கள். "தேசம் காப்போம்-தமிழகம் காப்போம்" எனும் தலைப்பில் ஒரு பிரசுரம் தயாரிக்கப்பட்டு சுமார் 1.5 கோடி வீடுகளுக்கு தருவதற்கு திட்டமிட்டனர்.

## இந்த பிரசுரத்தில் என்ன கூறப்பட்டுள்ளது? தமிழின் மேன்மை

மதமாற்ற அபாயம்

லவ்ஜிஹாத் ஆபத்து

இந்துக்களின் மக்கள் தொகை சரிவு

போன்ற விவரங்கள் இதில் உள்ளன.

"தமிழ்நாட்டில் 13,208 பஞ்சாயத்துகள், 6,872 வார்டுகளில் உள்ள 88,75,932 வீடுகள் தொடர்பு கொள்ளப்பட்டன. இதற்கு, ஆண்கள் 1,08,390 பேரும், 13,952 பெண்களும் இந்த பிரச்சாரத்தில் தங்களின் நேரமளித்து தொண்டாற்றினார்கள். இதற்கு தமிழகத்தில் முன்பை விட ஆதரவு அதிகமாக இருந்ததாக" ஆர்.எஸ்.எஸ் கூறுகின்றது.

இது இரண்டு உண்மைகளை வெளிப்படுத்துகின்றன.

1. சங் பரிவாரத்தின் எதிர்பார்ப்பு தமிழ்நாட்டில் நிறைவேறுவது கடினம்.

2. அதுவரை சங் பரிவாரம் தனது முயற்சிகளை கைவிடப்போவது இல்லை.

வர்ணாசிரமத்துக்கு எதிராக தமிழ்நாடு நீண்ட போராட்டம் நடத்தியிருந்தாலும் அதன் நீட்சியான சாதியத்துக்கு எதிராக அதே வீரியத்துடன் உள்ளதா எனில் அது மிகப்பெரிய கேள்விக் குறியே! தலித் மக்கள் மீதான தாக்குதல்கள், ஆணவக் கொலைகள் ஆகியவை தமிழ்நாட்டை ஏனைய மாநிலங்களிலிருந்து வேறுபடுத்தவில்லை என்பது கசப்பான உண்மை. இந்த சாதிய முரண்பாடுகளை தனக்கு சாதகமாக பயன்படுத்திகொள்ள இந்துத்துவ சக்திகள் முனைகின்றன என்பதையும் நாம் கவனத்தில் கொள்வது அவசியம்.

அஇஅதிமுக ஆட்சியை இவர்கள் தங்களுக்கு சாதகமாக எப்படியெல்லாம் பயன்படுத்திக் கொண்டார்கள் என்பதை நாம் ஏற்கனவே பார்த்தோம். அஇஅதிமுகவும், ஆட்சியின்போது செய்த ஊழல்களால் தங்களை காப்பாற்றிக்கொள்ள மோடி தலைமையிலான ஒன்றிய அரசை இப்பொழுது வரை ஆதரித்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நாம் அறிவோம்.

இந்தப் பின்னணியிலேயே திமுக அரசையும் அக்கட்சியின் செயல்பாடுகளையும் அணுக வேண்டியுள்ளது. மேலும், கட்சியின் தேசிய குழு முடிவுக்கு உட்பட்டு தமிழ்நாட்டில் பாரதிய ஜனதா கட்சியையும் அதன் கூட்டணியையும் வரும் தேர்தல்களிலும் இதர அனைத்து தளங்களிலும் எதிர்கொள்ள வேண்டி உள்ளது.

## மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும்

2016 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு எழுந்த புதிய அரசியல் சூழலை சரியாக புரிந்து கொண்டு, கட்சியின் கொல்லம் கட்சி காங்கிரசின் அரசியல் தீர்மானத்துக்கு உட்பட்டு, தமிழ்நாட்டில் பாரதிய ஜனதா கட்சியையும் அதன் கூட்டணியையும் முறியடித்து ஒரு மதச்சார்பற்ற, ஜனநாயக, இடதுசாரிக் கூட்டணியை கட்டி அமைப்பதற்கு கட்சி முயற்சித்து வெற்றியும் பெற்றது. 2019 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் திமுக

தலைமையிலான மதச்சார்பற்ற கூட்டணி பெற்ற வெற்றி இதற்குச் சான்றாகும். 2021ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலிலும் திமுக தலைமையிலான கூட்டணி தொடர்வதற்கு நம் கட்சி பெரிய பங்களிப்பை செய்திருக்கிறது.

நடந்து முடிந்த ஐந்து மாநிலத் தேர்தல்களின் முடிவு ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசுகளுக்கு இடையிலான முரண்பாட்டை தீவிரமாக வெளிப்படுத்தும் வகையில் அமைந்திருந்ததை காணமுடியும். மேற்கு வங்கத்தில் திரிணாமுல் காங்கிரஸ் மீண்டும் ஆட்சிக்கு வந்துள்ளது. அதேபோல் கேரளத்தில் இடதுசாரி ஜனநாயக முன்னணி மீண்டும் ஆட்சியை பிடித்துள்ளது. தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி அமைந்துள்ளது.

## திமுகவின் தேர்தல் வாக்குறுதிகள்

16வது சட்டமன்றத்திற்கான தேர்தல் நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் தனது தேர்தல் அறிக்கையில் அறுபத்தி ஒரு வாக்குறுதிகளை வழங்கி இருந்தது. இதல்லாமல் 10 ஆண்டுகளுக்கான தொலைநோக்குத் திட்டம் என்ற அறிக்கையையும் வெளியிட்டிருந்தது. இதுபோக ஒவ்வொரு மாவட்டத்திலும் குறிப்பிட்ட கோரிக்கைகளை முன்வைத்து அவைகளை நிறைவேற்றுவோம் என்று வாக்குறுதிகளை அளித்திருக்கிறது.

இந்நிலையில் ஆட்சிக்கு வந்தவுடன் திமுக அரசின் செயல்பாடுகளை நம் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு 17, 18 ஜுலை 2021 தேதிகளில் திருத்துறைப்பூண்டியில் கூடி விவாதித்து கீழ்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறது. அதில் புதிய ஆட்சி உடனடியாக சந்திக்க வேண்டிய சவாலாக கொரோனா தொடரின் இரண்டாவது அலை இருந்தது என்பதையும் அதை திமுக அரசு ஜனநாயக பூர்வமாக அனைத்துக் கட்சிகளையும் பங்கேற்கச் செய்து முன்கள பணியாளர்களை ஊக்கப்படுத்தி ஆக்சிஜன் பற்றாக்குறை, படுக்கைகளின் பற்றாக்குறை, மருந்துகளின் பற்றாக்குறை ஒன்றிய அரசின் பாரபட்சம் என பல்வேறு சிக்கல்களுக்கு இடையே கையாண்டது என சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், அனைத்து குடும்பத்திற்கும் 4000 ரூபாய் இரு தவணைகளில் வழங்கப்பட்டது. 14 வகை உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

நீட் தேர்வு குறித்து ஆய்வு செய்திட நீதியரசர் ஏ.கே. ராஜன் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. இக்குழுவில் நமது கட்சியின் சார்பில் மாநில நிர்வாக குழு உறுப்பினர் தோழர் டாக்டர் ஜி.ஆர். இரவீந்திரநாத் இடம்பெற்றிருந்தார். இக்குழு தனது அறிக்கையை மாநில அரசிடம் சமர்ப்பித்துள்ளது. நலவாரியங்கள் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. கட்டுமான நலவாரியத்தில் ஏஐடியூசி துணைப் பொதுச் செயலாளர் தோழர் ரவி இடம்பெற்றுள்ளார். சிறுபான்மை மக்கள் நல குழுவில் கட்சியின் நாகை மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் தோழர் தமீம் அன்சாரி இடம்பெற்றுள்ளார். தமிழ்நாடு எதிர்கொள்ளக்கூடிய முக்கிய பிரச்சினையான காவேரி நீர் பிரச்சினையில் காவேரி மேலாண்மை ஆணையம் அமைக்கப்பட்ட பிறகும் முழுநேர தலைவர் நியமனம் செய்யப்படவில்லை என்பதையும் கர்நாடக அரசு மேகதாது அணை கட்ட முயற்சிப்பது, பெண்ணையாற்றின் குறுக்கே கர்நாடகா அணை கட்டி முடித்து இருப்பதையும் கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு 12.7.2001 ஆம் தேதி அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்தி தமிழ்நாட்டின் நலன்களை காப்பாற்றுகின்ற கோரிக்கைகளோடு ஒன்றிய அரசை நிர்பந்தித்துள்ளதையும், நீட்தேர்விற்கு நிரந்தர விலக்குக் கோரும் சட்ட மசோதா நிறைவேற்றத்தையும் கட்சியின் மாநிலக்குழு கவனத்தில் கொண்டுள்ளது. மருத்துவக் கல்வியில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 சதவிகித இடஒதுக்கீடு வழங்கியுள்ளது. மத்திய தொகுப்பில் மருத்துவ உயர் கல்வியில் 27 சதவிகிதம் இதரப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இடஒதுக்கீடு பெற்றிருப்பது வரவேற்பிற்குரியது. தமிழ்நாட்டு மக்களின் தொடர் கோரிக்கையான “பேரறிவாளன் உட்பட ஏழுவர் விடுதலை”யை விரைவுபடுத்தும் நடவடிக்கைகள் அவசியம் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. மற்றும் நீண்டகாலமாக விசாரணை கைதிகளாக உள்ள இஸ்லாமிய மக்களையும் விடுதலை செய்ய வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தி வருகிறது.

திமுக அரசு, நகரப் பேருந்துகளில் பெண்களுக்கு இலவச பயணம் அறிவித்துள்ளது. பெட்ரோல் லிட்டருக்கு மூன்று ரூபாய் குறைத்துள்ளது வேளாண் துறைக்கான தனி பட்ஜெட் தமிழ்நாடு சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஒன்றிய அரசு கொண்டுவந்துள்ள 3 வேளாண் சட்டங்களையும் ரத்து செய்ய வேண்டும் என்று மாநில சட்டப்பேரவையில் இந்த அரசு தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றியது. இந்த தீர்மானத்திற்கு எதிராக பாஜக மட்டுமின்றி அதிமுகவும் வெளிநடப்பு செய்தது கவனத்தில் கொள்ள வேண்டியதாகும். தமிழ்நாட்டிற்கு என்று தனித்த கல்விக் கொள்கையை உருவாக்குவோம் என்று சட்டப்பேரவையில் திமுக அரசு அறிவித்துள்ளது. இப்படி பல தேர்தல் கால வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள வாக்குறுதிகளையும் ஐந்து ஆண்டுகளுக்குள் நிறைவேற்றுவோம் என்று **தமிழக மாநில முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் சட்டப்பேரவையில் அறிவித்துள்ளார். தந்தை பெரியார் அவர்களின் பிறந்த தினத்தை சமூக நீதி நாளாக கடைப்பிடிப்பது என்ற தமிழ்நாடு அரசின் முடிவு வரவேற்கத்தக்கதாகும்.**

## திமுக அரசு வெளியிட்டுள்ள வெள்ளையறிக்கை

இந்நிலையில் தமிழ்நாடு அரசின் நிதி அமைச்சர் தமிழ்நாட்டு நிதி நிலைமையைப் பற்றி ஒரு வெள்ளை அறிக்கையை வெளியிட்டுள்ளார். கடந்த அஇஅதிமுக ஆட்சியில் ஏற்பட்ட நிர்வாக சீர்கேடுகளால் தமிழ்நாடு மிகப்பெரிய கடன் வலையில் சிக்கி உள்ளது என்பதை சுட்டிக்காட்டியுள்ளார். தமிழ்நாடு மின்சார வாரியமும், அரசுப் போக்குவரத்துக் கழகமும் சுமார் 5 லட்சம் கோடி ரூபாய் கடனுக்கு காரணம் என்பதையும், மாநில அரசின் வரி வருவாயில் சொத்து வரி வருவாய் பத்தாண்டுகள் உயர்த்தப்படாமல் உள்ளது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். இது வரி உயர்விற்கு வழி வகுக்குமோ என்ற ஐயம் மக்களிடம் நிலவுகிறது. அரசு போக்குவரத்துக் கழகம் மக்களுக்கான

சேவைத்துறையாகும். இதை இலாபக் கண்ணோட்டத்தோடு அணுகுவது தவறானதாகும். மின்சாரத் துறையில் கார்ப்பரேட் கம்பெனிகளுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகளை மறைத்து நட்டக்கணக்கு காட்டுவது சரியல்ல.

ஒன்றிய அரசு வழங்கவேண்டிய ஜிஎஸ்டி நிலுவைத் தொகையை வழங்காமல் காலம் தாழ்த்துகிறது என்பதையும் ஒன்றிய அரசின் இந்த ஜிஎஸ்டி முறையையே மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## திமுக அரசின் மாநில பட்ஜெட்

மாநில நிதியமைச்சர் ஏற்கனவே வெள்ளை அறிக்கையில் சுட்டிக் காட்டியபடி மாநிலத்தின் மிகப்பெரிய கடன் காரணமாக வரியை உயர்த்தி விடலாம் என்ற அச்சம் பொதுவாகவே நிலவியது.. ஆனால் நிதிநிலை அறிக்கையில் அவை எவையும் பிரதிபலிக்கவில்லை என்பது ஆறுதல் அளிக்கக்கூடியது. இந்த இடைக்கால பட்ஜெட் இன்றைக்கு உள்ள சூழலில் ஒரு பாதகமில்லாத பட்ஜெட் என்று நம் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

**திமுக ஆட்சியும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி முன்னெடுக்க வேண்டிய பணிகளும்**

## மாநில உரிமைகள்

அரசியல் சட்ட வரையறைப்படி ‘ஒன்றிய அரசு’ என்று மாநில அரசு குறிப்பிட்டுவருவது சரியானதாகும். மாநில உரிமைகளை தொடர்ந்து எதேச்சதிகாரமாக பறித்து வருகிற மோடி அரசுக்கு சட்டரீதியாக உணர்த்துவதாகவே அச்சொல் அமைந்துள்ளது.

தமிழ்நாடு மாநில உரிமைக்கான போராட்டத்தில் முன்னோடியாக இருந்துள்ளது. இராஜமன்னார்குழு, சர்க்காரியா குழு போன்ற குழுக்களை அமைத்து மாநில உரிமைகளுக்கான குரலை தமிழ்நாடு முன்னெடுத்தது. எனவே, அந்தப் பாரம்பரியத்தை, தற்போதைய சூழலுக்கு ஏற்ப உயர்த்தி பிடிக்கும் அரசியல் போராட்டத்தை நடத்த வேண்டியுள்ளது. கேரளம் உள்ளிட்ட பிஜேபி ஆட்சிப்

பொறுப்பில் இல்லாத மாநில அரசுகளையும் தமிழக அரசு இணைத்து கொண்டு செயல்படுவது பயனளிக்கும். ஜி.எஸ்டி, நிதி வருவாய் பங்கீடு, பேரிடர் காலத்தில் மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்யும் பாரபட்சமான நிதி, ஆளுநர் மூலம் மாநில அரசை ஆட்டுவிக்கும் தன்மை ஆகியவற்றில் இந்த மாநிலங்களுக்கும், பாஜகவிற்கும் இடையில் இருக்கும் முரண்பாட்டை, அரசியல் ரீதியில் எதிர்கொள்ள வேண்டிய பொறுப்பு அதிகரித்துள்ளது. புதிதாக வந்துள்ள ஆளுநரின் அணுகுமுறைகளை கட்சி கூர்ந்து கவனித்து வருகிறது. இது மாநில உரிமையைப் பாதுகாக்கும் நடவடிக்கையாக இருக்கும். இந்த அரசியல் போராட்டத்தை நம் கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

## <u>தமிழ்த்தேசியம் என்ற பெயரில் வெறுப்பு அரசியல்</u>

தமிழ்நாட்டில் இளைஞர்களில் ஒருபகுதியினர் ஒன்றிய அரசின் மீதான வெறுப்பை, தமிழ்த் தேசியம் என்ற, அரசியல் உள்நோக்கம் கொண்ட தந்திரத்திற்கு இரையாகி வாக்களித்திருப்பதையும் காணமுடிகிறது. நவதாராளமயம் இதன் காரணமாகவும் அதேநேரத்தில் விளைவாகவும் உள்ளது. கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக, அடையாள சுய பெருமிதங்களுக்கு ஊக்கம் கொடுத்து தமிழ்நாட்டைப் பிளவுபடுத்தி சிதைக்க வழிவகை செய்து வருகிறது. இது வேற்றுமையில் ஒற்றுமை என்ற அங்கீகாரத்துடன் செயல்படுவதற்கு பதிலாக, ஒருவரின் பெருமை மற்றொருவரின் அடையாளத்தை வெறுப்பதாக மாற்றப்படுகிறது. வேற்றுமையில் ஒற்றுமைக்கு பதிலாக, வேற்றுமையில் இருந்து வெறுப்பு அரசியலாக வளர்க்க படுகிறது. நம் கட்சியின் மன்னார்குடி மாநில மாநாடு நிறைவேற்றிய அரசியல் தீர்மானத்தில் மிகத் தெளிவாக தேசிய இனப்பிரச்சினையில் ஒரு நிலைப்பாட்டை எடுத்துள்ளது என்பதை நாம் அறிவோம். அதே வேளையில் மொழிவாரி மாநிலங்கள் உருவான வரலாறு குறித்தும், ஆட்சி, நிர்வாகம் மற்றும் கல்வி ஆகியவற்றில் தாய் மொழி வழியில் அமைவதை வலியுறுத்திய போராட்ட வரலாறும் அடுத்த தலைமுறைக்கும் எடுத்துச் செல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. ஏனெனில்

*இந்துத்வ சக்திகளை எதிர்ப்பதில் முனைப்போடுள்ள திராவிட அரசியல் பண்பாட்டு நடவடிக்கைகளை மடைமாற்றம் செய்திட திராவிட வூதமிழ்தேசிய மோதலாக கட்டமைக்க இந்துத்துவா சக்திகள் முயல்கின்றன. இத்தகைய சூழ்ச்சிக்கு இரையான வலதுசாரி தன்மை கொண்ட தமிழ் தேசியம் பேசும் சக்திகள் நடைமுறையில் அவர்களின் அரசியல் ஆயுதங்களாக இயங்குகின்றன. எனவே, இந்த மொழி மற்றும் பண்பாடு குறித்த கடந்த கால, நிகழ்கால பிரச்சினைகளில் வகுப்புவாத மற்றும் ஏகாதிபத்தியத்தின் தாக்கத்தை அம்பலபடுத்த வேண்டியுள்ளது.*

*இலங்கை தமிழர்களுக்கான உரிமைப் போராட்டத்திற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவு தொடரும். தமிழ்நாட்டில் உள்ள இலங்கை தமிழ் அகதிகளின் நலன்களுக்காக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நிற்கும்.*

## **சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராக**

*சாதி ரீதியிலான மேலாதிக்கம், கல்வி, வேலை வாய்ப்பில் நீடிப்பதை ஏற்க முடியாது என்ற நியாயத்தின் அடிப்படையில் வளர்ச்சி பெற்றதே நீதிக் கட்சியும், சுயமரியாதை முழக்கமும். அதுவே பின்னாளில் பிராந்திய வளர்ச்சிக்கான முழக்கமாகவும், அரசியல் அதிகாரத்தை கைப்பற்றியதாகவும் மாறியது. இந்த வரலாற்றின் நீட்சி, சாதி ரீதியிலான ஒடுக்குமுறையை நிறுத்துவதில் பிரதிபலிக்கவில்லை. உற்பத்தி உடைமை, யாருக்கு என்ன பணி என்பதை மட்டும் தீர்மானிப்பதில்லை. யார் என்ன என்ன வாழ்வியல் நடைமுறைகளை (பண்பாட்டை) பின்பற்றலாம் என்பதையும் தீர்மானிக்கிறது.இது “மனு”வின் சட்டம். இன்றைய மக்களாட்சி சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற போதிலும், நிலப்பிரபுத்துவ விழுமியங்களையே சிந்தனைகள் தாங்கி நிற்கிறது.*

*ஐந்தாண்டுகள் ஆட்சி செய்ய தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு முதலாளித்துவ அரசு, பன்னெடும் காலமாக நீடிக்கும் இந்த செயலுக்கு முடிவுரை எழுதும் என எதிர்பார்க்க முடியாது. ஆனால், சட்டத்தின் முன் அனைவரும் சமம், ஜனநாயகம்*

அனைவருக்கும் பொதுவானதே போன்ற முழக்கங்கள் தீவிரமாக வேண்டும். பட்டியலின மற்றும் நிலமற்ற பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான நிலச் சீர்திருத்தம் அமலாவதற்கான போராட்ட நடவடிக்கைகள் தேவைப்படுகிறது. கடந்த காலத்தில் திமுக ஆட்சி பொறுப்பில் இருந்த போது 2 ஏக்கர் நிலம் என அறிவித்தது. 2006 ஆகஸ்ட் மாதத்தில் நடந்த கூட்டத் தொடரில், அன்றைய முதல்வர் மு.கருணாநிதி 110 விதியின் கீழ் 1.95 இலட்சம் ஏக்கர் தரிசு நிலம் மேம்படுத்தப்பட்டு விநியோகிக்கப்படும் என்றும், ஆக்கிரமிக்கப்பட்டவையாக உள்ள 7 இலட்சம் ஏக்கர் நிலம் சிறு, குறு விவசாயிகளுக்கு பட்டா வழங்கப்படும் என்றும் தெரிவித்தார். இதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் வரவேற்றனர். ஆனாலும் மேலே கூறியவாறு மேலாதிக்கம் சார்ந்த விழுமியங்களை உடைக்கும் சீர்திருத்தங்களாக அந்த அறிவிப்பு முழுமை பெறவில்லை. எனவே, இந்த பிரச்சினைகள் மீதான ஈர்ப்பை உருவாக்கும் பிரச்சாரமும் அதைத்தொடர்ந்து முன்னெடுப்பதில் மக்களை ஈடுபடுத்தும் செயலும், இயக்கமும் தேவைப்படுகிறது. மேலும், பட்டியலின, பழங்குடியின மக்களுக்கான சிறப்பு உட்கூறு திட்ட நிதிஒதுக்கீடு தமிழ்நாட்டில் பயன்படுத்தப்படாமல் திருப்பி அனுப்பப்படுகிறது. அவற்றை முறையாகப் பயன்படுத்த வேண்டும்.

சமூக விழுமியங்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்த தேவைப்படும் நடவடிக்கைகள் இன்றும் தேவைப்படுகிறது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன் நடைபெற்றதைப் போல் தமிழ்நாட்டில், சாதிக்கலவரங்கள் நடைபெறவில்லை. ஆனால், தனிநபர் கொலைகள் சாதிய கண்ணோட்டத்தில் நடைபெறுகின்றன. இதில் சாதி மறுப்பு திருமணங்கள் செய்து கொள்ளும் இளைஞர்கள் தாக்கப்படுவது, கொலை செய்யப்படுவது அதிகமாக வெளிப்படுகிறது. மாவட்டங்களில் சில பட்டியலின கிராமங்கள் மொத்தமாக தாக்கப்படும் சம்பவங்கள் நடந்தேறின. இதை தடுக்கும் வகையில், கட்சியும், தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கமும் முன்வைத்த “ஆணவ கொலைகள் தடுப்பு சட்டம்” இயற்றுவது அவசியம். இது பிற்போக்கு கருத்துக்களுக்கு

*எதிரான நடவடிக்கை ஆகும். பாஜக-வின் 'லவ் ஜிகாத்' முழக்கம் போல் தமிழகத்தில், ஒரு பகுதியினர் முன்வைப்பதை பெரும்பான்மையான ஜனநாயக சக்திகள் ஏற்கவில்லை என்பதை வெளிப்படுத்த வேண்டியுள்ளது. இதில் சமூக ஒடுக்குமுறை ஒரு அம்சம் என்றால், மற்றொன்று பெண்ணடிமைத் தனம் ஆகும். பெண் உரிமைக்கான போராட்டத்துடன் இணைந்த ஒன்றாக இந்தச் சமூக பிரச்சினையை கையாள வேண்டியுள்ளது.*

## சமூக நீதிப் போராட்டத்தின் அடுத்தக்கட்டம்

*மானுடவியல் அறிஞர்கள் சமஸ்கிருதமயமாக்கல் (மேல்நிலை ஆக்கிக் கொள்ளுதல்) குறித்து விவாதம் நடத்துவதை கவனிக்க வேண்டும். ஏற்கனவே இந்திய சாதிய படிநிலை, புனிதம் மற்றும் தீட்டு என்ற தன்மையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. சமஸ்கிருதமயமாக்கல் என்ற பண்பாட்டு நடவடிக்கை தனக்கு மேலே உள்ளோர் பின்பற்றும் பண்பாட்டு நடவடிக்கைகளை உள்வாங்கி, புனிதப்படுத்தியும், மற்றவரை தீட்டானவராகவும் நடத்தும் நிலை வளருகிறது. இதன் விளைவே இன்றைய பிற்படுத்தப்படுத்தப்பட்ட மக்கள் மத்தியில் உருவாகி வளர்ந்து வரும் மேல்நிலை ஆதிக்க உணர்வு ஆகும். இதன் காரணமாக, திராவிட இயக்கத்தின் சுயமரியாதை, சமூக நீதி மற்றும் சமூக சீர்திருத்தம் ஆகிய முழக்கங்கள் தொடர்ந்து அடுத்தடுத்த வளர்ச்சியை எட்டாமல், தேக்கநிலையை அடைந்திருக்கிறது. குறிப்பாக 1990களுக்கு பிந்தைய நவதாராளமய கொள்கை அமலாக்கம், ஒரு பக்கம் பெரும் கொள்ளை சுரண்டலுக்கும், மற்றொருபுறம் இச்சுரண்டலை எதிர்த்து ஒன்றுபட்ட போராட்டம் உருவாவதைத் தடுக்க தனித்தனி குழுக்களின் அடையாளத்தை முன்னிறுத்தி அடையாளபெருமிதங்களுக்கான போராட்டமாக மாற்றுவதற்கும் காரணமாக இருக்கிறது.தமிழ்நாட்டில் இந்த முப்பது ஆண்டுகள் தீவிரமான தாராளமய கொள்கை தாராளமாகவே அமலாகியுள்ளது. எனவே, சமூக சீர்திருத்த நடவடிக்கைகள் அடுத்த கட்டத்தை எட்டுவதற்கான செயல்பாடுகள் தேவைப்படுகின்றன.*

## தமிழ்நாட்டில் தாராளமய, தனியார்மய, உலகமயக் கொள்கை அமலாக்கம்

தற்போதைய சூழலில் எந்த ஒரு மாநில அரசும் பொருளாதார சீர்திருத்தம் எனக் கூறினால், அது அச்சமூட்டும் வரிகளே. மன்மோகன் சிங் தலைமையில் இரண்டாவது முறையாக ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சி அமைத்தபோது, மனித முகம் பொருந்திய பொருளாதார சீர்திருத்தம் எனக் கூறினார். ஆனால், அது சாத்தியமாகவில்லை. சில முதலாளித்துவ நாடுகளில், பொதுத்துறை நிறுவனங்கள் தனியாருக்கு தாரை வார்க்கப்படுகின்றன. அரசு சொத்துக்களை அபகரித்து குவிப்பது மட்டுமல்ல. நீர், மின்சாரம் போன்ற பொது பயன்பாட்டு பணிகளும், கல்வி மற்றும் சுகாதாரம் போன்ற பொதுப்பணிகளும் தனியாரின் மூலதனக் குவிப்பிற்கான களமாக மாறி வருகிறது. நாம் மேலே குறிப்பிட்ட தொடர வேண்டிய சமூக சீர்திருத்தத்தை, ஏகாதிபத்திய உலகமயமாக்கல் அழிக்கவும் செய்கிறது. அதாவது சமூக சீர்திருத்த நடவடிக்கைகளை கூட அனுமதிக்க இன்றைய நிதிமூலதனமும், ஏகபோக தொழில் மூலதனமும் அனுமதிக்கவில்லை. இதை ஆளும் வர்க்கம் நன்கு அறிந்திருக்கிறது. ஒருபுறம் சமூகநீதி மற்றும் இட ஒதுக்கீடு முழக்கங்களை முன் வைப்பது; மற்றொரு புறம் இடஒதுக்கீடு பலன்களை சிறந்த முறையில் வழங்கி வந்த அரசு பொதுத் துறை நிறுவனங்களை தனியாருக்கு தாரைவார்ப்பது நடைபெறுகிறது. இரட்டை தன்மை வாய்ந்த இந்தச் செயலை அம்பலப்படுத்துவதும், அதை எதிர்த்துப் போராடுவதும் சமூக சீர்திருத்தங்களை பாதுகாத்து அடுத்த கட்டத்திற்கு நகர பயனளிக்கும்.

கட்சி சமூக சீர்திருத்த நடவடிக்கைகளையும் முன்னெடுக்கிறது. ஆனால், அவற்றோடு மட்டும் திருப்தியடையவில்லை. பொருளாதார சீர்திருத்தம் என்ற பெயரில் மக்கள் சொத்தை சூறையாடுவதை முற்றாக ஏற்கவில்லை. அதேநேரம் முதலாளித்துவ தாராளமய கொள்கைகளை அமலாக்கும் அரசியல் கட்சிகள் சமூக சீர்திருத்தங்களை முன்வைத்துக் கொண்டே, மக்கள் சொத்தான பொதுத் துறை நிறுவனங்களை சூறையாட அனுமதிக்கின்றன. கட்சி சமூக

சீர்திருத்தங்களை முன்னெடுக்கும் காரணத்தால்தான், தனியார் துறையிலும் இட ஒதுக்கீடு வழங்கப்படவேண்டும் என்று வலியுறுத்துகிறது. இதன் பொருள் தனியாருக்கு பொதுத் துறையை தாரைவார்ப்பதற்கான சம்மதம் அல்ல. மாறாக, தனியார்மயம் என்கிற பெயரில் சமூக நீதி என்ற நிவாரணம் பறிபோகாமல் இருக்கவே இக்கோரிக்கை வலியுறுத்தப்படுகிறது. மேலும், அரசின் பல்வேறு சலுகைகளையும் பொதுச் சொத்துக்களையும் பயன்படுத்தி கொள்ளும் தனியார் நிறுவனங்கள், சமூக நீதியை பாதுகாக்கும் வகையில் இட ஒதுக்கீட்டை தங்கள் நிறுவனங்களில் வழங்குவது மக்களின் உரிமை சார்ந்ததாகும்.தனியார் துறைக்கான கேம்பஸ் நேர்முக தேர்வுகளின்போது இட ஒதுக்கீடு பின்பற்றப்படுவதை, கல்வி மற்றும் தொழில் நிறுவனங்கள் வெளிப்படையாக அறிவிக்கும் நடவடிக்கையை வலியுறுத்த வேண்டும்.

கல்வி, சுகாதாரம் போன்ற அனைத்து துறைகளிலும் ஏகபோக நிறுவனங்கள் அனுமதிக்கப்பட்டதன் விளைவாக அவற்றை வணிகமயமாக்குவது நிலை நிறுத்தப்பட்டுள்ளது. தற்போது குடிநீர் மற்றும் காற்று மாசு உள்ளிட்ட பிரச்சினைகளோடு, காட்டை ஆன்மீகத்தின் பேரில் ஆக்கிரமிக்கும் கார்ப்பரேட் செயல்களும் அதிகரித்து வருகின்றன. மேற்கு மாவட்டங்களில் இந்த பிரச்சினைகள் முன்னுக்கு வந்துள்ளன. சூயஸ், பெக்டெல் ஆகிய பன்னாட்டு நிறுவனங்கள் குடிநீர் விநியோகத்தில் ஈடுபடுகின்றன. சாதி ரீதியில் தாழ்த்தப்பட்ட பிரிவினருக்கு மறுக்கப்பட்ட பொது குழாயின் குடிநீர் இப்போது எல்லோருக்கும் வணிகமயம் ஆகியுள்ளது. பெப்சி மற்றும் கொக்கோ கோலா நிறுவனங்கள் உறிஞ்சிய நிலத்தடி நீரின் மிச்சத்தை, சூயஸ் மற்றும் பெக்டெல் விநியோகிக்க வருவதை எதிர்க்க பொலிவியா போன்ற பிற நாட்டு அனுபவங்களையும் நாம் கணக்கில் கொள்ள வேண்டும்.

சுற்றுசூழல் பாதிப்பு தற்போது முன்னுக்கு வந்துள்ள கவலை தரும் பிரச்சினை ஆகும். உலகில் அனைத்து நாடுகளிலும் கார்ப்பரேட் நிறுவனங்கள், காடுகளை குறிவைப்பது நிகழ்ந்து வருகிறது. தமிழகத்தில் ஜக்கி வாசுதேவின் ஆக்கிரமிப்பு, தேனி மாவட்டம் குரங்கணி பகுதி சுற்றுலா என்ற பெயரில்

அழிக்கப்பட்டு வருவது போன்றவை, இயற்கையை மாசு படுத்தும் செயல்களாகும். காடுகளை, தனியார் ஆக்கிரமிக்க உதவியாக ஒன்றிய அரசு சுற்றுசூழல் சட்டம் 2020-ஐ அறிமுகம் செய்துள்ளது. இதன்மீது பொதுமக்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினர். படித்த நடுத்தரவர்க்கம் மற்றும் மாணவர்கள், விதை பந்து தூவுவது ஒரு புறம் என்றால், மறுபுறத்தில் தனிநபர்களுக்கு காடு அழிப்புக்கு வாய்ப்புகளை உருவாக்கித் தருவதை அரசு கொள்கையாக கொண்டுள்ளதை கவனிக்க வேண்டும்.

## பாலின சமத்துவம்

கட்சி தொடர்ந்து பாலின சமத்துவத்திற்கான போராட்டத்தை முன்னெடுத்து வருகிறது. திராவிட இயக்கமும் நடைமுறையில் பெண்களை அதிகாரப் படுத்தும் பல முயற்சிகளை எடுத்துள்ளது. ஏகாதிபத்திய உலகமய பண்பாடு பாலின சமத்துவத்திற்கு எதிரானது. பெண்கள் மீதான பாலியல் வன்முறையை தடுப்பதற்கான உடனடி கடமை நம்முன் நிற்கிறது. சட்டமன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் பெண்களுக்கு 33 சதவிகித இடஒதுக்கீடு கோரியும், திருநங்கை, திருநம்பிகளுக்கான உரிமைகளை மேலும் வென்றெடுக்க கட்சி தொடர் இயக்கங்களை மேற்கொள்ளும்.

## தொழிலாளி விவசாயி ஒற்றுமை

கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக இந்திய கம்யூனிஸ்ட கட்சியின் அரசியல் தீர்மானங்கள், உலகில் ஏற்பட்டு வருகிற வலது சாரி திருப்பம் ஆளும் வர்க்கத்திற்கு சாதகமான மனநிலையை அதிகரித்து வருகிறது எனக் குறிப்பிடுகிறது. மேலும், உலகம் முழுவதும் வர்க்க பலாபலன்கள் வலதுசாரி முதலாளித்துவ ஆளும் வர்க்கத்திற்கு சாதகமாக உள்ளது. இதை இடதுசாரிகளுக்கு ஆதரவாக மாற்றுவது மிகப்பெரிய அரசியல் தத்துவார்த்த போராட்டமாக இருக்க வேண்டும் என குறிப்பிடுகிறது. இந்தியாவிலும் கூட இந்த போக்கு அதிகரித்ததை பார்க்க முடியும். இதன் விளைவாக, மேலும், மேலும் ஏகாதிபத்திய உலகமயமாக்கல், தனக்கு கிடைத்த தாராளமய கொள்கையைப் பயன்படுத்தி, மேலும், மேலும்

இயற்கை மற்றும் பொதுச் சொத்துக்களை சூறையாடுவதுடன், இந்தியாவில் விவசாயம் மற்றும் தொழிலாளர் சட்டங்களையும் திருத்தி வருகிறது. இதை எதிர்த்து விவசாயிகள் நடத்திவரும் நீடித்த மற்றும் உறுதியான போராட்டம் பெரும் நம்பிக்கை அளிப்பதாக உள்ளது.

மேலே விவாதித்த சீர்திருத்தம், மக்கள் கோரிக்கைகள் ஆகியவற்றுடன் கட்சி கடந்த சட்டமன்ற தேர்தலுக்காக முன்வைத்த தேர்தல் அறிக்கையில் உள்ள கோரிக்கைகள் மற்றும் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான உடனடி போராட்டங்களையும் விவசாயி தொழிலாளி ஒன்று பட்டு கார்ப்பரேட் நிறுவனங்களின் கொள்ளை வாய்ப்புக்கான கொள்கைகளை எதிர்த்த போராட்டத்தையும் கூட்டாக நடத்தும் போதுதான், வர்க்க பலாபலன்களை இடதுசாரிகளை நோக்கி சற்றேனும் திருப்ப முடியும். மக்களை அணிதிரட்டுவது நம் கட்சி மற்றும் வர்க்க வெகுமக்கள் அமைப்புகள் மக்களோடு கொண்டுள்ள தொடர்புகளால் தான் சாத்தியப்படும். நம் கட்சியின் சிவகங்கை அமைப்பு நிலை மாநாடு நம் அமைப்புகளை வெகு மக்களிடம் கொண்டு செல்வதற்கான வழிவகைகளை வகுத்துக் கொடுத்துள்ளது. அந்த வழியில் நாம் முன்னேறி செல்ல வேண்டி உள்ளது.

இத்தகைய சமூக, பொருளாதார, அரசியல் பின்புலத்தில் கட்சி அணிகளும், அமைப்புகளும் ஆற்ற வேண்டிய கடமைகள் நிறையவுள்ளன.

அரசியல் ரீதியாக, அமைப்புநிலை ரீதியாக, இயக்க ரீதியாக கடமைகளை வரையறுத்துக் கொண்டு, மக்களோடு மக்களாக இரண்டற கலந்து பணியாற்ற வேண்டும்.

பழைய பாணியிலான வேலை முறைகளைக் கைவிட்டு, புதிய சவால்களை எதிர்கொள்ளத் தக்கதாக வேலைத் திட்டங்களை வகுத்து செயல்பட வேண்டும்.

**மாநிலக்குழு**

இவ்வறிக்கையின் அடிப்படையில் கீழ்க்கண்ட 57 முழக்கங்களை முன்வைத்து நமது கட்சியின் தனித்தன்மையை வெளிப்படுத்தும் விதமாக இயக்கங்களை நடத்திட வேண்டும்.

## கோரிக்கைகள்

1. ஆண்டுக்கு இரண்டு கோடி பேருக்கு வேலை என்ற மோடி அரசின் கொடுத்த வாக்குறுதி என்னவாயிற்று?
2. விவசாயிகள் வருமானம் இரட்டிப்பு என்ற வாக்குறுதி என்னவாயிற்று?
3. ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை யாருக்கானது - கார்ப்பரேட் முதலாளிகளுக்கானதா? மக்களுக்கானதா?
4. சுகாதார துறைக்கான நிதியை அதிகப்படுத்து!
5. கல்விக்கான நிதியை அதிகப்படுத்து!
6. வேளாண்மை துறைக்கான நிதியை அதிகப்படுத்து!
7. ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்திற்கான நிதியை அதிகப்படுத்து!
8. கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு வரியை குறைத்து, மக்கள் மீது வரியை சுமத்தாதே!
9. எரிபொருள் விலை நிர்ணயம் செய்யும் உரிமையை எண்ணை நிறுவனங்களுக்கு வழங்காதே!
10. மாநில அரசுகளின் நிதி உரிமைகளை பறிக்காதே!
11. ஜி.எஸ்.டி. - யால் மாநிலத்திற்கு ஏற்பட்ட நிதி இழப்பை ஈடுசெய்ய உரிய நிதியை வழங்கிடு.
12. ஒன்றிய அரசின் திட்டங்களை செயல்படுத்தியதற்கான நிதியை மாநிலங்களுக்கு, நிலுவை இல்லாமல் உடனே வழங்கிடு.
13. பொதுத்துறை நிறுவனங்களை தனியார்மயமாக்காதே!
14. நாட்டின் சொத்துக்களை விற்றுப் பணமாக்காதே.
15. வேலையின்மையைப் போக்க, வேலைவாய்ப்பை உருவாக்க திட்டம் வகுத்திடு.

16. அரசு வேலை பெறுவதற்கான வயது வரம்பை நீக்கு!

17. வேலையில்லா கால நிவாரணம் வழங்கு.

18. வேலை அளிக்கவில்லை எனில், வேலை கிடைக்கும் வரை கல்விக்கடனை வட்டியின்றி ஒத்திவை - அல்லது ரத்து செய்!

19. கொரோனா பாதிப்பிலிருந்து மீள்வதற்கு மக்களின் வாங்கும் சக்தியை அதிகரிப்பதற்கு குடும்பம் ஒன்றுக்கு ரூ.7500 வழங்கு.

20. வேளாண் சட்டங்களை திரும்பப் பெறு.

21. மின்சார திருத்தச் சட்டத்தை திரும்பப் பெறு.

22. நாடாளுமன்ற ஜனநாயகத்தை சீர்குலைக்காதே!

23. தனிநபர் சுதந்திரத்தை பறிக்காதே!

24. பெகாசஸ் ஒட்டுக் கேட்டது குறித்து உரிய விசாரணை செய்து தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடு.

25. தேசிய பாதுகாப்புச் சட்டத்தை தவறாக பயன்படுத்தாதே! பழிவாங்காதே!

26. ஜம்மு-காஷ்மீர் மக்களுக்கு அளித்திட்ட வாக்குறுதியை மீறாதே! அம்மாநில மக்களின் உரிமையை பறித்து யூனியன் பிரதேசமாக்கியதை ரத்து செய்!

27. குடியுரிமை திருத்தச் சட்டத்தை ரத்து செய்!

28. இந்து-முஸ்லீம்-கிறிஸ்தவர் என பாகுபாடு செய்து மக்களை பிளவு படுத்தாதே!

29. நாட்டின் நடுநிலை கொள்கைகளை விட்டு, அமெரிக்கா ஏகாதிபத்திய கைக் கூலியாக மாறாதே!

30. தேசிய கல்வி கொள்கை என்ற பெயரால் மனு தர்மத்தை புகுத்தாதே!

31. சிறு, குறு தொழிலை பாதுகாக்க உரிய நடவடிக்கை எடு.

32. மின் துறையை தனியார் மயமாக்காதே!

33. சேவைத்துறையில் பணிபுரிவோர் நலன் காக்கப்பட வேண்டும்.

34. தமிழகத்தில் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள ஒரு கோடி பேருக்கு வேலை வாய்ப்பை உருவாக்கிடுக!

35. சுற்றுச் சூழல் பாதுகாக்கப்பட வேண்டும்.

36. இயற்கை பேரிடர் பாதிப்பிற்கேற்ப மாநிலத்திற்கு உரிய பேரிடர் நிதி வழங்கிட வேண்டும்.

37. இந்துத்வா கொள்கைகளையும் நவீன தாராளமய பொருளாதார கொள்கைகளையும் ஒரு சேர எதிர்ப்பது.

38. தமிழர்களின் நாகரிக தொன்மையை நிலைநாட்டும் ஆய்வுகளை முன்னெடுப்பது.

39. மத நல்லிணக்கத்தை வலியுறுத்துவது.

40. ஆர்எஸ்எஸ் நடத்தும் ஷாகாக்கள் மூலம் சிறுபான்மையினர் எதிர்ப்பு - கம்யூனிஸ்ட் எதிர்ப்பு - திராவிட எதிர்ப்பு - பெரியார் வெறுப்பு ஆகியவை வலுவாக திணிக்கப்படுகின்றன. இவைகளை நாம் தத்துவார்த்த ரீதியாக எதிர்கொள்ளவும் மேற்கண்ட அமைப்பை தடை செய்யவும் வலியுறுத்த வேண்டும்.

41. மேற்கு மாவட்டங்களில் இந்துத்வா சக்திகள் வலுவாக உள்ளதை கவனத்தில் கொண்டு நாம் அரசியல் ரீதியாக எதிர்கொள்ள வேண்டும்.

42. இந்துத்வா சக்திகளின் கல்வி நிலையங்களின் அபாயம் குறித்து நாம் கவனமுடன் செயல்பட வேண்டும்.

43. பகவத் கீதையும், திருக்குறளும் தன் இரு கண்கள் என சங்பரிவார் கூறுவதை நிராகரிக்க வேண்டும். “திருக்குறளை” நாம் உயர்த்திப் பிடிக்க வேண்டும்.

44. தெய்வீக தமிழ்ச் சங்கம் என்ற பெயரால் சங் பரிவார் அமைப்புகள் தமிழ்நாட்டில் காலூன்ற மேற்கொள்ளும் முயற்சியை அரசியல் ரீதியாக தடுத்திட வேண்டும்.

45. தேர்தல் கால வாக்குறுதிகளை அரசு நிறைவேற்றிட சட்டமன்றத்திலும் மக்கள் மத்தியிலும் எடுத்துச் செல்ல, நம் கட்சியின் தனித்தன்மையை நிலைநாட்டும் வகையில் தொடர் இயக்கங்களை மேற்கொள்ள வேண்டும்.

46. மாநில உரிமைகள், மாநில அதிகாரம், நிதி நிலை ஆகியன குறித்தும் மாநில அளவிலான விரிவடைந்த சிறப்பு மாநாடு நடத்துவது.

47. ஆணவக்கொலை தடுப்புச் சட்டம் நிறைவேற்றிட வலியுறுத்துவது.

48. சட்டமன்றம், நாடாளுமன்றத்தில் பெண்களுக்கான 33 சதவிகித இடஒதுக்கீட்டு சட்டம் நிறைவேற போராட வேண்டும்.

49. பட்டியலின மற்றும் பழங்குடி மக்களுக்கான ஒன்றிய அரசின் சிறப்பு உட்கூறு திட்ட நிதியை முழுமையாக இம்மக்களின் நலனுக்கே பயன்படுத்த வேண்டும்.

50. சாதிவாரி கணக்கெடுப்பை நடத்திட ஒன்றிய அரசை வலியுறுத்தி போராட வேண்டும்.

51. விகிதாச்சார பிரதிநிதித்துவ தேர்தல் முறை கொண்டு வர இயக்கம் காண வேண்டும்.

52. தமிழ்நாடு சட்டப் பேரவையில் திமுக அரசால் நிறைவேற்றப்பட்ட நீட் தேர்வு எதிர்ப்பு மசோதாவிற்கு ஒன்றிய அரசு ஒப்புதல் வழங்க போராட வேண்டும்.

53. தஞ்சை டெல்டா மாவட்டங்களில் ஹைட்ரோ கார்பன் எடுப்பதற்கான ஒன்றிய அரசின் முயற்சியை முழுமையாக முறியடிக்க வேண்டும்.

54. தமிழ்நாட்டின் இந்துசமய அறநிலையத் துறைக்கு சொந்தமான விவசாய நிலங்களில் குத்தகை வாடகையை உயர்த்தக் கூடாது. கோயில் இடங்களில் உள்ள குடியிருப்புகளை முறைப்படுத்தி பட்டா வழங்க வேண்டும்.

55. தமிழ்நாட்டிலுள்ள பஞ்சமி நிலங்களை கண்டறிந்து ஒடுக்கப்பட்ட மக்களுக்கு வழங்கிட இயக்கம் காண வேண்டும்.

56. தமிழ்நாட்டிலுள்ள ஒன்றிய அரசுத் துறைகளில் வேலை வாய்ப்புகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

57. லோக் ஆயுக் விசாரணை அமைப்பு உடனடியாக அமைக்க வேண்டும்.

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி**
**தமிழ்நாடு மாநிலக்குழு**

# படியுங்கள்

## ஜனசக்தி

தனிபிரதி : ரூ. 10.00

ஆண்டுச் சந்தா : ரூ. 500.00

முகவரி

142/16, ஜானி ஜான்கான் சாலை,

இராயப்பேட்டை, சென்னை - 600 014.

## NEW AGE

தனிபிரதி : ரூ. 7.00

ஆண்டுச் சந்தா : ரூ. 350.00

முகவரி

Ajoy Bhavan,

15, Com. Indrajit Gupta Marg.

New Delhi - 110002

## தாமரை

தனிபிரதி : ரூ. 20.00

ஆண்டுச் சந்தா : ரூ. 200.00

முகவரி

பாலன் இல்லம்

43/19, செவாலியே சிவாஜி கணேசன் சாலை,

தியாகராய நகர், சென்னை - 600 017.

## தொழிற்சங்க செய்தி

தனிபிரதி : ரூ. 10.00

ஆண்டுச் சந்தா : ரூ. 120.00

முகவரி

கே.டி.கே. தங்கமணி இல்லம்,

2/1, கோவூர் வைத்தியநாதன் தெரு,

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002.

Printed at : Pavai Printers (P) Ltd., Ph: 044-28482441,42155309